உ
சிவமயம்

# சித்தன்கேணி
# ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரர் ஆலயம்



# தல வரலாறு

விகாரி வருஷம் - 2020

உ
ஓம் சிவாயநம


# சித்தன்கேணி

# ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரர் ஆலயம்

(தனஉடை - சித்தன்கேணி)

பதிவு இல:- HA/5JA/160

## (சித்தன்கேணிச் சிவன் கோவில்)



# தல வரலாறு

*வெளியீடு:-*
**ஆலய பரிபாலன சபை,**

**2020**

உ

சிவமயம்

# முன்னுரை

சைவசமய வழிபாட்டில் ஆலய வழிபாடு முக்கிய பாகம் வகிக்கின்றது. இதனால் சைவப்பெருமக்கள் செறிந்து வாழும் இடங்களில் ஆலயங்கள் அமைந்துள்ளன.

இறைவன் ஓரிடத்தில் எழுந்தருள முன்னர் அற்புதங்கள் நிகழும் அல்லது இறைவன் திருக்குறிப்புகளைக் காட்டுவார். அடியார்கள் இவற்றுடன் தொடர்புடையவர்களாக இருப்பர். இறைவன் எழுந்தருளியதும் அப் புண்ணிய பூமி தலம் என்றழைக்கப்படுகிறது.

ஆண்டவர் கோவில் கொள்ளும் பொழுது நிகழும் நிகழ்வுகளே ஆலய தோற்றம் எனப்படும் அடியார்கள் பங்களிப்புடன் அந்த ஆலயம் படிப்படியாக வளர்ச்சியடையும் ஆலய தோற்றமும் அதன் வளர்ச்சியும் தலபுராணம் அல்லது வரலாறு என்பதால் அதனைப் பாடல்களாகவும்; வசன நடையாகவும் ஆலயத்தைச் சார்ந்தோர் அல்லது அடியார்கள் வைத்திருப்பதுமுண்டு காலத்திற்குக் காலம் ஆலய நிகழ்வுகளை இவர்கள் பதிந்து ஆலய வரலாற்றுத் தொகுப்பை ஆவணமாகப் பேணுவர். அடியார்கள் ஆலய வரலாற்றைத் தெரிந்து கொள்வதற்கு அவர்கள் வேண்டியவற்றைச் செய்வார்கள்.

ஆலய வரலாற்றுத் தொகுப்பு ஆலயத்தின் மிக முக்கியமான ஆவணங்களில் ஒன்றாக உள்ளது. இது பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுவதை நாம் அவதானிக்கலாம்.

சைவ அடியார்கள் தம் ஊர்களில் அல்லது நிரந்தரமாக வாழும் இடங்களில் தாம் வழிபடும் ஆலயங்களின் உண்மையான வரலாற்றுத் தகவல்களை அறிந்திலர் என்பது கண்கூடு. இந்த ஊரிலும் இதே நிலை காணப்படுகிறது. இந்நிலை களையப்பட வேண்டும்.

இதற்கமைய இவ்வூரிலுள்ள ஆலயங்களில் ஒன்றாகிய சித்தன்கேணி ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரர் ஆலயம் (சித்தன்கேணிச் சிவன் கோவில்) பற்றி அதன் தோற்றம் தொடர்பான தகவல்கள் இங்கு பதியப்பட்டுள்ளன. தூரநோக்குக்கு அமைய, தற்கால, வருங்காலத் தேவைகளைக் கருத்திற் கொண்டு இப்பதிவு செய்யப்படுகிறது.

**சிவன் கோவில் வரலாற்றுத் தொகுப்புக்குப் பின்வரும் ஆவணங்கள் ஆதாரங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன:**

கிடைக்கப்பெற்றுள்ள

(1) ஆலய பழைய ஆவணங்கள்
(2) ஆலய பரிபாலன சபை ஆண்டறிக்கைகள்; கூட்ட அறிக்கைகள் மற்றும்
(3) பிரசுரங்கள்
(4) கல் வெட்டுக்கள் (கற்சாசனங்கள்)
(5) ஆலயத்தைப்பற்றி பதிந்து வைத்த பதிவுகள்

1. அமரர் செ. சுப்பிரமணியம் (பிறஸ் மணியம்) அவர்கள் ஆலய பரிபாலன சபைச் செயலாளர் (24 வருடங்கள்)
2. அமரர் மு. க. சுப்பிரமணியம் (சட்டத்தரணி) அவர்கள் ஆலய பரிபாலன சபைத் தலைவர் (33 வருடங்கள்)

(6) சில நூல்களின் பதிவுகள் தரவுகள் குறிப்புகள்

(7) இவற்றுடன் இவ்வூர் முதியோர்களிடமிருந்து தெரிந்து கொண்ட தகவல்கள், மற்றும் சமகால நிகழ்வுகள்

பழைமையான ஆவணங்களின் பிரதிகளை இக்காலத்தில் பெறமுடியாமையுள்ளது. என்பது அனைவரும் அறிவர் இதனால் இந்த ஆலயத்தின் பழைய ஆவணங்களைப் பற்றிய விபரங்களையும் அவற்றுள் அடங்கியுள்ள முக்கியமான விடயங்களையும் இந்தத் தொகுப்பில் பதிய வேண்டியது அவசியமென்று உணரப்பட்டுள்ளது. காலத்தின் தேவை கருதி அவற்றின் பதிவுகள் இங்கு பதியப்பட்டுள்ளன. ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரப்பெருமானின் திருவருட் துணையுடனும் அடியார்களின் பங்களிப்புடனும் இந்த ஆலய வரலாறு தொகுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலய வரலாற்றுத் தொகுப்பை எம் இறைவன் ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரர் பாதாரவிந்தங்களில் சமர்ப்பித்து வணங்கி அடியார்களுக்கு அருட்பிரசாதமாக வழங்குகிறோம். எல்லோரும் பெற்று பயனடைவீர்களாக.

சிவன் திருவருள் என்றும் எல்லோருக்கும் நிறைவாகக் கிடைக்க இறைவன் தாள் பணிகின்றோம்.

**ஓம் நமசிவாய சிவாயநம ஓம்**

விகாரி வருடம் 2020ஆம் ஆண்டு

**ஆலய பரிபாலன சபை**



உ

சிவமயம்

# ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலயம்

**( தன உடை [தனவுடை] )**

**சித்தன்கேணி.**

## (சித்தன்கேணிச் சிவன் கோவில்)

# ஆலய வரலாறு

❖ **ஊரின் சிறப்பு**

சித்தர்கள் வாழ்ந்த சிவபூமி சித்தன்கேணி என்னும் ஊராகும். சித்த முனிவரின் மகன் சுபதிருஷ்டரின் சீடன் சித்தையர், மற்றும் பாம்பாட்டிச்சித்தர் போன்ற சித்தர்கள் தவம் செய்த இடம் இவ்வூராகும். இவர்கள் இங்கு கேணி அமைத்துத் தம் சிவ வழிபாட்டுக்குப் பயன்படுத்தினர். சித்தர்கள் வாழ்ந்தமையாலும், அவர்கள் கேணி அமைத்ததினாலும், இந்த ஊர் "சித்தன்கேணி" என்ற பெயரைப்பெற்றது.

சிவ வழிபாட்டின் பொருட்டுச் சித்தர்கள் அமைத்த கேணி இன்றும் உள்ளது. இது சித்தன்கேணிச்சந்தியிலிருந்து, மேற்கு நோக்கி மூளாய் என்னும் ஊருக்குச் செல்லும் தார்ப்பாதை (வீதி) அருகில் ஏறக்குறைய இருநூறு (200) மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இக் கேணியில், பாம்பாட்டிச் சித்தர் என்றழைக்கப்பட்ட சித்தர், தமது சித்தின் ஒன்றாக, ஒரு விஷ உறிஞ்சிக்கல்லை நட்டு, "இவ்வூர் மக்கள் இனிமேல் ஒருபொழுதும் அரவங்களாற் (பாம்புகளாற்) தீண்டப்பட்டு, இவ்வுலக வாழ்வை நிறைவு செய்ய மாட்டார்கள்" என்று மொழிந்த வாக்கு இன்றும் பலித்து வருகின்றது.

இந்தக் கேணியின் முன்றலில் வைரவப்பெருமான் கோவிலும், அரசமரமும் இக்காலத்தில் உள்ளன. வைரவப்பெருமான், பிள்ளையாருடனும், பரிவாரமூர்த்திகளுடனும் இங்கு எழுந்தருள் பாலிக்கின்றார்.

இவ்வூரில், பிள்ளையார் கோவிலும், சிவன் கோவிலும், அருள் விளங்கும் பெரிய ஆலயங்களாக விளங்குகின்றன. இவை சித்தர்கள் அமைத்த கேணிக்கு அண்மையில் அமைந்துள்ளன. பிள்ளையார் "மகாகணபதிப்பிள்ளையார்" என்ற திருநாமத்துடன் "பெரியவளவுப் பதி"யிற் கோவில் கொண்டு அருள்கின்றார். சிவன் "ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரர்" என்னும் சிவ நாமத்துடன் "ஸ்ரீசிவகாமி (சுந்தரி) அம்பாள்" சமேதரராய் "தன உடை

(தனவுடை)ப் பதியில்'' எழுந்தருள் பாலிக்கின்றார். இக் கோவில் அன்று தொட்டு இன்று வரை **"சித்தன்கேணிச் சிவன் கோவில்"** என்றே அழைக்கப்படுகின்றது.

இந்த ஆலயத்திற்கு மிக அண்மையில், வட-மேற்குத் திசையில், சித்தர்கள் அமைத்த கேணி உள்ளது. இக் கேணிக்கருகில் உள்ள தார் வீதியே, இச் சிவன் கோவிலின் வட-புறத்தின் மூன்றாம் வீதியாகப் பாவனையில் உள்ளது.

### ❖ உற்பத்தி – முதற்கோவில்

சிவ பக்தராகவும், சித்தன்கேணியைச் சார்ந்தவராகவும், விளங்கிய உயர் திரு "சுப்பிரமணியர் கதிர்காமஞானி" அவர்களாற் "சித்தன்கேணிச் சிவன் கோவில்", தன உடை (தனவுடை)ப் பதியில், முதன் முதலாகக் கட்டப்பட்டது.

இறை நேசராம் இவருக்குச், சிவன் திருவருள் நிறைய, ஓர் ஆலயம் அமைக்க வேண்டும் என்ற பக்தி ஆசை, இவரின் உள்ளத்தில் ஊன்றி நிலைத்தது. இறைவனும் திருக்குறிப்புக் காட்ட, இவர் தன் தமையனார் திரு சுப்பிரமணியர் ஆறுமுகம் அவர்களுக்குரிய தனஉடை (தனவுடை) என்னும் காணியில் அவரின் அனுமதியுடனும், ஆசீர்வாதத்துடனும் கி.பி.1850 ஆம் ஆண்டில், ஒரு மடாலயம் அமைத்து, "சிதம்பரம் அம்பலவாண சுவாமி"யைப் பிரதிஷ்டை செய்து, உதய காலப் பூசையைத் தவறாது செய்வித்து, சிவ வழிபாட்டை முதன் முதலில் ஆரம்பித்து வைத்தார்.

அர்ச்சகராகப் (பூசகராகப்) பிரம்மஸ்ரீ இராமையா சபாபதிஐயர் அவர்களின் மகன் பிரம்மஸ்ரீ பா(வா)ல சுப்பைஐயர் (பாலசுப்பிரமணியம் ஐயர்) அவர்களை ஆலய நிறுவுநர் நியமித்தார். இம்மடாலயத்திற் பூசை வழிபாடுகள் படிப்படியாகவும் பக்தி பூர்வமாகவும் விரிவடையலாயின இவ்வூரவர்களும் ஈசுவரனை வழிபட்டுச் சிறப்போடு அறவாழ்வு வாழ்வாராயினர்.

தனஉடை (தனவுடை) என்னும் இந்த நிலம் "தோம்பு" என்னும் அரசாங்கத்தின் காணிப்பதிவு ஏட்டில் "நாகம்மா" என்பவரின் பெயரிலும், "வினாசி" என்பவரது பெயரிலும் பதியப்பட்டுள்ளது. இந்த நிலத்தின் ஒரு பகுதி (கிழக்கு) கி.பி ஆயிரத்து எண்ணூறு (1800) ஆண்டுக்கு முற்பட்ட அல்லது தொடக்க ஆண்டுகாலப் பகுதியில், திரு.கதிர்காமர் சுப்பிரமணியர் அவர்களின் மூத்தமகன் திரு. ஆறுமுகம் அவர்களின் கொள்விலை ஆட்சிக்குட்பட்டதாக இருந்தது.

## ❖ நில உரிமை மாற்றம்

திரு. சு. ஆறுமுகம் அவர்கள் அமரத்துவம் அடைந்த பின், இந்நிலம் (தனஉடை – தனவுடை), அவரின் கொள்விலை உறுதிப்படி, அவரின் மனைவியாகிய திரு குமாரவேல் முருகவேல் அவர்களுடைய மகளாம் "பரமானந்தி" அவர்களுக்கும், பிள்ளைகளுக்கும் உரிமையாகியது.

திருமதி பரமானந்தி ஆறுமுகம் அவர்கள், தமது சொந்தத் தேவையின் நிமிர்த்தம், தனது மைத்துனராகிய பிரமச்சாரியாம் உயர் திரு. சு. கதிர்காமஞானி அவர்களிடமிருந்து பௌண் பத்தொன்பது (19) சிலிங் பதினைந்து (15) ஆகிய தொகையை (பணத்தை)ப் பெற்றுக் கொண்டார்.

இப்பணம் ஆலய நிறுவுனராம் சிவச்செல்வர் சு. கதிர்காமஞானி அவர்கள் இறைவனாம் சிதம்பரம் அம்பலவாணசுவாமியின் உதய காலப் பூசைக்கு முதல் என்று கட்டி வைத்ததாகும்.

இப்பணக் கொடுப்பனவு மூலம் திருமதி பரமானந்தி ஆறுமுகம் அவர்களிடமிருந்து, தனஉடை (தனவுடை) என்னும் நிலத்தை (காணியை), இங்கு கோவில் கொண்டிருக்கும் இறைவனாம் "சிதம்பரம் அம்பலவாணசுவாமி" பெயரில், பிரம்மச்சாரியும் சிவசீலருமாகிய திரு. சு. கதிர்காமஞானி அவர்கள் கொள்வனவு செய்தார்கள்.

தனஉடை (தனவுடை) என்னும் இந்நிலம் பரப்பு நிலை (பரநிலை) இலாட்சம் பதினொன்றைக் (11) கொண்டதாயும், வீடு, வான் பயிர்களும் செய்பயிர்களும்,கிணற்றின் அரைவாசிப்பங்கை உள்ளடக்கியதாகவும் இருந்தது.

இந்த நிலம் தெற்குத் திசையில் ஒழுங்கை வடக்குத் திசையில் தெரு (தார் வீதி) கிழக்குத் திசையில், ஒழுங்கை, மேற்குத் திசையில் பிரம்மஸ்ரீ இ. சபாபதிஐயர் அவர்களின் நிலத்தையும் எல்லைகளாகக் கொண்டிருந்தது.

இக் கொள்வனவுக்குரிய அறுதி உறுதி, இலக்கம் 550 (ஐநூற்றி ஐம்பது)ல், ஆயிரத்து எண்நூற்றி ஐம்பத்தேழாம் ஆண்டு ஐப்பசி மாதம் ஏழாம் நாள் (1857.10.07) ,நொத்தாரிஸ் சு.அம்பலவாணர் சரவணமுத்து முகதாவில், திருமதி பரமானந்தி ஆறுமுகம் அவர்களால், அவரினதும், அவரின் பிள்ளைகளின் சார்பிலும் எழுதப்பட்டது.

இந்த உறுதிச் செயற்பாட்டிற்கு, பிரம்மஸ்ரீ நாகேந்திரஐயர் சுப்பையாஐயர், திரு முருகர் காசிநாதர், திரு முருகர் சீனியன், திரு பரமர் அருணாசலம் ஆகியோர் சாட்சிகளாவர்.

## ❖ ஆலய நிறுவுநரின் தர்மசாசனம்

சிவன் அடியவராம் பெரியார் திரு. சு. கதிர்காமஞானி அவர்கள், மடாலயம் அமைத்து சிவ வழிபாட்டை ஆரம்பித்த தனஉடை (தனவுடை) என்னும் நிலப்பரப்பு இலாட்சம் பதினொன்றுடன்(11) தொலிசிட்டி பரப்பு நிலை இலாட்சம் பதினொன்றே முக்கால் (11 ¾) தீவு தணி வயல் - பரப்பு நெல் இலாட்சம் பதினாறு (16), ஆகியனவற்றையும், கோவிற் பூசைகளுக்கும், பரிபாலனத்துக்கும் வேண்டிய வருமானத்திற்காகத் தர்மசாசனம் செய்தார்.

## ❖ இரண்டாவது ஆலயம்

சிவப்பிரியராம் திரு. சு. கதிர்காமஞானி அவர்கள் தனஉடை (தனவுடை) என்னும் தலத்தில் கி.பி ஆயிரத்து எண்ணூற்றி ஐம்பதாம் (1850) ஆண்டில் தான் கட்டிய மடாலயத்தை மீள்நிர்மாணம் செய்து, கோவிலாக அமைத்தார்.

மானிப்பாய் என்னும் ஊரைச் சார்ந்தவரான ஸ்ரீமான் அருணாசலம் பொன்னம்பலமுதலியார் அவர்கள் காசியாத்திரையாற் திரும்பும் பொழுது, கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியில், தாம் கட்டிய "பொன்னம்பலவாணேஸ்வரர்" ஆலயத்திற் பிரதிஷ்டை செய்வதற்காக சுயம்பு லிங்கங்களைக் கொண்டு வந்தார். கொழும்பு வாசியான இவரின் இறுதிக்காலம் (1887 ஆம் ஆண்டு) வர முன்னர், தவத்திரு சு. கதிர்காமஞானி அவர்கள், இவரிடம் சுயம்புலிங்கம் ஒன்றைப் பெற்றிருந்தார். அச் சுயம்புலிங்கப்பெருமானைத் தாம் மீளமைத்த ஆலயத்தில், மூலவராகப் பிரதிஷ்டை செய்து கி.பி 1890 ஆம் ஆண்டில் புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண, அஷ்டபந்தன பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகத்தைச் செய்வித்தார்.

இவ்வாலயத்தில் மூலவராக எழுந்தருள் பாலிக்கும் இறைவன் "ஸ்ரீசிதம்பரேஸ்வரர்" என்ற திருநாமத்தைத் தாங்கியுள்ளார். இதனால் இக்காலம் முதல், இந்த ஆலயம் "ஸ்ரீசிதம்பரேஸ்வரர்" ஆலயமாகப் பரிணமித்தது. எனினும், இக்கோவில், அன்று தொட்டு இன்று வரை "சித்தன்கேணிச் சிவன் கோவில்" என்றே அழைக்கப்பட்டு வருகின்றது.

சிவனின் சக்தி "ஸ்ரீசிவகாமி அம்பாள்" என்ற திருநாமத்தைப் பெற்றுள்ளார். ஆலயத்தில் பூசைகள் திருவிழாக்கள் வழிபாடுகள் சிறப்புடன் நடைபெறலாயின சிதம்பரத் திருத்தலத்தில் நடைபெறும் பூசை, வழிபாட்டு முறையையே இவ்வாலயத்திலும் பின்பற்றப்படுகின்றது.

## ❖ அந்திம கால (மரண) சாசனம்

சிவதொண்டராம் பெரியார் திரு. சுப்பிரமணியர் கதிர்காமஞானி அவர்கள் இந்த ஆலயம் சம்பந்தமாகத் தாம் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, தமது கடைசி விருப்பமாக, இச்சா பத்திரம் அல்லது சங்கிதை அல்லது அந்திம (மரண) சாசனம் என்னும் (தெஸ்தமெந்து–TESTAMENT) உறுதியை எழுதி வைத்தார்.

**இந்த உறுதியில் தெரிவிக்கப்பட்டுள்ள (பதியப்பட்டுள்ள) விபரங்களாவன:-**

தனஉடை (தனவுடை) என்னும் இத்தலத்தில் தான் (திரு. சுப்பிரமணியர் கதிர்காமஞானி) சிவன் கோவிலைக் கட்டிவித்துப் பராபரித்ததாகப் பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளார்.

**தாம் சம்பாத்தியம் பண்ணிய; கொள்விலை ஆட்சியாயுள்ள தனது ஆதனங்களான;**

❖ தனஉடை (தனவுடை) பரப்பு இலாட்சம் பதினொன்று (11) கிணறும், வான் பயிர்களும்,

- ❖ தொலிசிட்டி பரப்பு நிலை இலாட்சம் பதினொன்றே முக்கால் (11¾) கிணறு, பனைகளும், வேம்பும், இலுப்பை மரங்களும்,
- ❖ தீவு தணி பரப்பு நெல் இலாட்சம் பதினாறு (16) எனவும், இந்த மூன்று (3) பிரிவுக் காணிகளுக்கு விலை கண்ட பவுண் நூற்றி ஒன்று (101) சிலிங் பத்து (10) என்றும், இவை அனைத்தையும் இவர் இக் கோவிலுக்குக் காணிக்கையாக்கினர். தன்னிடம் கி.பி 1864ஆண்டில், கடன் பெற்றோர்களின் பெயர்களையும், அவர்கள் கடன் பெற்ற மாதம், திகதி, பெற்ற தொகை ஆகியனவற்றைத் தெரிவித்து, அவர்களிடமிருந்து வர வேண்டிய மொத்தப்பணம் பவுண் ஐம்பத்தாறு (56) சிலிங் பதினெட்டு (18) ஐக் கோவிலுக்கு உரித்தாக்கினார். பூசைக்குரிய வெண்கல, பித்தளைச் சாமான்களின் விபரங்களையும், அதன் பெறுமதிகளையும் தனித்தனியாகத் தெரிவித்து, பசுமாடும், எருதும், அவைற்றின் பெறுமதிகளையும் சேர்ந்த தொகை பவுண் அறுபத்தைந்து (65) என்றும் இவை இச் சிவன் கோவிலுக்கு உரியன என்றும், இவற்றில் பித்தளை, வெண்கலச் சாமான்கள் அனைத்தும், இக் கோவிலின் பூசகராம் பிரம்மஸ்ரீ ச. பா(வா)ல சுப்பையர் (பாலசுப்பிரமணிய ஐயர்) வசம் ஒப்படைத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தன்னுடன் கூட நின்று மத்திட்சனாக இருக்கும் திரு. சண்முகம் வேலு (மருமகன் முறையானவர் என்று கூறப்படுகின்றது.) என்பவரைத் தன் சார்பில் ஆலயத்தைப் பராமரிப்பதற்குப் பராமரிப்புக்காரனாக நியமித்துக் கோவிலையும், ஆதனங்களையும் அவரிடம் ஒப்படைத்தார். ஆலயத்தைப் பராமரிக்கும் பொழுது திரு.சண்முகம் வேலு அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளை விபரித்தும்,அதற்குரிய அதிகாரங்களையும் கொடுத்து பூசகரில் யாதொரு தவறு வருங்காலத்தில் மத்தியஸ்தர் தீர்ப்பின் பிரகாரம் விலக்கிக் கொள்ளலாம் போன்ற சில நிபந்தனைகளையும் விதித்தார்.

சிவ அன்பராகிய திரு.சுப்பிரமணியர் கதிர்காம ஞானி அவர்களின் கடைசி விருப்பமான இந்த விபரங்களடங்கிய உறுதி கி.பி ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தைந்தாம் ஆண்டு ஆடி மாதம் ஆறாம் திகதி (1865.7.6) நொத்தாரிஸ் முருகேசர் அமரசிங்கம் முகதாவில், இலக்கம் நூற்றுத் தொன்னூற்றேழில் (197) எழுதப்பட்டது. இந்த உறுதியிற் கூறப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தையும் ஏற்றுக் கொண்ட பூசகராம் பிரம்மஸ்ரீ ச. பா(வா)ல சுப்பையர் அவர்களும், திரு. சண்முகம் வேலு அவர்களும் பெரியார் திரு. சு. கதிர்காமஞானி அவர்களுடன் சேர்ந்து இந்த உறுதியிற் கையொப்பமிட்டனர்.

திரு. நாகமுத்து பரமானந்தன், திரு பெரியார் கணபதி, திரு. வேலாயுதர் சங்கரப்பிள்ளை, திரு. முருகர் சீனியர், திரு கணபதியார் சிற்றம்பலம், திரு. வேலாயுதர் சண்முகம், திரு. சுப்பிரமணியர் கார்த்திகேசர் ஆகியோர் இந்த உறுதியிற் சாட்சிகளாகக் கையொப்பம் வைத்துள்ளனர்.

இந்த அந்திமகால (மரண) சாசனத்தை கி. பி. 1865ஆம் ஆண்டில் எழுதினாலும், சிவசீலராம் பெரியார் திரு. சு. கதிர்காமஞானி அவர்கள், மேலும் இருபத்தேழு (27) ஆண்டுகள்

இவ்வுலகில் இருந்து சிவ வாழ்வு வாழ்ந்தார். இக்காலத்திலேயே, தாம் கட்டிய மடாலயத்தின் மூலவர் பின்னற்பட்டமையாற் (திருவுருவத்தில் ஊறு ஏற்பட்டுள்ளமையாற்) போலும், கி.பி 1890 ஆம் ஆண்டில், இன்றைய வழிபாட்டிலுள்ள மூலவரைத் திருத்தொண்டராம் திரு. சு. கதிர்காமஞானி அவர்கள் பிரதிஷ்டை செய்து திருத்தொண்டு புரியும் பேற்றை மீண்டும் பெற்றார்.

மானுட வாழ்வில் ஆலயம் அமைப்போர் பேறு பெற்றவர்களாவர். அதிலும் சிவனுக்கு ஆலயம் அமைத்துச் சிவ வழிபாட்டை ஆரம்பிப்பவர்கள், மிகப்பெரும் பேறு பெற்றவர் களாவார்கள். இப்பெரும் பேற்றைப் பெற்ற சிவப்பிரியராம் உயர்திரு சுப்பிரமணியர் கதிர்காம ஞானி அவர்களின் சிவப்பணிகளும் ,திருவழிபாடுகளும் கி.பி 1892 ஆம் ஆண்டிற் பூரணமாக, அவரின் சிவ வாழ்வும் இவ்வுலகில் நிறைவுற்றது.

### ❖ கற்சாசனம் [கல்வெட்டு] அமைத்தல்


தன உடை (தனவுடை)த் தலத்தில், மடாலயம் அமைத்து, சிவனைப் பிரதிஷ்டை செய்து, முதன்முதற் சிவ வழிபாட்டை ஆரம்பித்த சிவத்தவப்பெரியார் திரு.சு.கதிர்காமஞானி அவர்களை, இவ்வாலயத்தில் என்றும் நினைவு கூர்ந்து மரியாதை செய்யும் வண்ணம், பின்வரும் வாசகங்கள் அடங்கிய கற்சாசனம், கோபுர வாசலில் தென் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

### ❖ கற்சாசன [கல்வெட்டு] விபரம்:-

**ஸ்ரீ சிவ சிதம்பரேஸ்வரர் ஆலயம்**
**தனவுடைப்பதி – சித்தன்கேணி**
**இந்த ஆலயம் 1850 ஆம் ஆண்டு**
**திரு. சுப்பிரமணியர் கதிர்காமஞானி**
**அவர்களால் நிறுவப்பட்டது.**
**ஆலய பரிபாலன சபை**
**03-03-2013**

ஆலய பரிபாலன சபையினரால் இக் கற்சாசனம் அமைக்கப்பட்டது. 03.03.2013இல் நடைபெற்ற ஆலய பரிபாலன சபைக் கூட்டத்தில் இவ் வாசகங்கள் எழுதப்பட்டு, ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, கற்சாசனம் அமைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மீளமைக்கப்பட்ட இந்த ஆலயத்திற் பிரதான திருப்பணி செய்தோர்களின் விபரங்கள், அத்திருப்பணிகளிற் சாசன மூலம் பதிப்பிக்கப்பட்ட பொழுது, ஆலய உற்பத்தி, ஆலய நிறுவுனர் ஆகியோரின் தகவல்களைத் தரும் கல்வெட்டு, தற்கால வழிபாட்டில் உள்ள ஆலயத்திற் காணப்படவில்லை. இதனைக் கவனித்து, கருத்திற் கொண்ட ஆலய பரிபாலன சபையினர், மிக்க விருப்புடன் இக் கற்சாசனம் அமைக்கும் திருத்தொண்டைச் செய்துள்ளனர்.





உ
ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலயம்
தனுவுடைப்பதி சித்தன்கேணி
இந்த ஆலயம் 1850ம் ஆண்டு
திரு.சுப்பிரமணியர் கதிர்காமஞானி
அவர்களால் நிறுவப்பட்டது
ஆலய பரிபாலன சபை
03.03.2013

❖ **ஆலய வம்சவளியினர் காலம்**

சிவப் பெரியாரும், பிரம்மச்சாரியுமான உயர்திரு. சுப்பிரமணியர் கதிர்காமஞானி அவர்கள் காலத்துக்குப் பின், இந்த ஆலயத்தின் ஆட்சியும் பரிபாலன உரிமையும், அவரின் சகோதரன் சு. ஆறுமுகம் பரமானந்தி தம்பதிகள், மற்றும் சகோதரி சின்னாச்சி – த. (தம்பர்) சுவாமிநாதன் தம்பதிகள் குடும்பத்தவர்களுக்குச் சேர்ந்தது.

கி.பி 1900 ஆம் ஆண்டில் அமரர் சு. ஆறுமுகம் - பரமானந்தி(யார்) தம்பதிகளின் இரண்டாம் மகள் தங்கமும், அவரின் மணாளன் அ. விசுவநாதர் இவர்களின் மகன் (மூத்த மகன்) கணபதிமுத்து, அவரின் மனைவி தெய்வானைப்பிள்ளை ஆகியோர், ஆலயத்தைப் புனர்நிர்மாணம் செய்து மகா கும்பாபிஷேகத்தைச் செய்தனர்.

இக் காலத்தில், இந்த ஆலயத்தின் வெளி வீதி (இரண்டாம்)யின் வட-புறத்தில், வெளி வசந்தமண்டபம் கட்டப்பட்டது. இதன் காலம் 1906 தை மாதமாகும். திரு. சபாபதிப்பிள்ளை மார்க்கண்டபிள்ளை அவர்கள் இத் திருப்பணியைச் செய்துள்ளார். இவ் வசந்த மண்டபம் நூறு வருடங்களின் பின் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. இதன் பொழுது அழகிய பண்டிகை (தூபி) ஐந்து கலசங்களுடன் கி.பி 2012ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. 17-06-2012 ஞாயிற்றுக்கிழமை கலசகுடமுழுக்கு பிரவேசக் கிரியைகளுடன் சிவனும் அம்பாளும் பிரவேசஞ் செய்து எழுந்தருள ஆரம்பித்த பூசை வழிபாடுகள் இம் மண்டபத்தில் தொடர்ந்தும் நடைபெறுகின்றன.

வசந்தமண்டபத்தையும், அதனுடன் இணைந்த முன் மண்டபத்தையும், திரு. ச. மார்க்கண்டபிள்ளையின் பின் அவரின் பீட்டப்பிள்ளைகளான சட்டத்தரணி குமரேசர் வேலாயுதன் புதல்வர்கள் மீளமைக்கும் திருப்பணியைச் செய்துள்ளனர். இவர்களின் பெயர்களும், திருப்பணி செய்யப்பட்ட காலங்களடங்கிய கற்சாசனம், தனித்தனியே இம் மண்டபத்தில் பதிக்கப்பட்டுள்ளது.

## ஆலய மீள் நிர்மானம் – இன்றைய ஆலயம்

சிவத்தொண்டர் உயர்திரு. சுப்பிரமணியர் கதிர்காமஞானி அவர்கள், தாம் முதன் முதற் கட்டிய மடாலயத்தை, சுண்ணாம்பு, செங்கற்களால் மீள் நிர்மாணம் செய்தார். இந்த ஆலயம் மீண்டும் மீள் நிர்மாணம் செய்யப்பட்டு, வைரக்கற் கோவிலாக, இன்று மிளிர்கின்றது.

திரு. சங்கரப்பிள்ளை சபாபதிச்சட்டம்பியார் (ஆசிரியர்) அவர்கள் கி.பி 1908 ஆம் ஆண்டில் ஆலய பரிபாலகராகப் பொறுப்பேற்றார். முன்னைய ஆலயம், மீள் நிர்மானம் செய்யப்பட்டு, இப்பொழுது வழிபாட்டிலுள்ள வைரக்கல் ஆலயமாக மாற்றம் அடைவதற்கான திருத்தொண்டை முதலில் ஆரம்பித்தவர் இவரேயாவார்.

இவரின் உள்ளத்தில், இக் கோவிலை, வைரக்கற் கோவிலாகக், கட்ட வேண்டும் என்ற பக்தி ஆசை ஏற்பட்டது. இதனை நிறைவேற்றும் பொருட்டுத் தன்னிடமிருந்த சொந்தப்பணத்தை செலவழிப்பாராயினர். வழிபடுவோர்களும், இத் திருப்பணியில் இவருடன் இணைந்து கொண்டனர். ஊரவர்களிடமிருந்து பணமும், பொருள்களும், காணிக்கையாகப் பெறப்பட்டன.

பிடி அரிசியும் இத் திருப்பணிக்குச் சேர்க்கப்பட்டது. ஆர்வத்துடனும், பெரும் முயற்சியுடனும், திரு. ச. சபாபதிச் சட்டம்பியார் (உபாத்தியார்-ஆசிரியர்) அவர்கள், ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது நோய்க்காளானார். கோவிற் திருப்பணிப் பொறுப்பைத் தன் தம்பியாகிய திரு. சங்கரப்பிள்ளை கணபதிமுத்துச்சாமி அவர்களிடம் ஒப்படைத்து, திருப்பணியை நிறைவேற்றி வைப்பதாக அவரிடம் வாக்குறுதியையும் பெற்ற பின் திரு. ச. சபாபதிச் சட்டம்பியார் அவர்கள் அமரத்துவமடைந்தார்கள்.

சிவப்பெருந்தொண்டராம் திரு. ச. கணபதிமுத்துச்சாமி அவர்கள், ஆலயத் திருத் தொண்டிற் பெரும் பக்தி ஆர்வத்தையுடையவராய் இருந்தார். இதனாற் தன்தமையனார் தன்னிடம் தந்த ஆலயத் திருப்பணிப் பொறுப்பை மிக்க ஆர்வத்துடன் முன்னின்று செய்வாராயினர். அவர் சிங்கப்பூர், மலேசியா (முன்னைய மலாய் நாடு) நாடுகளுக்குச் சென்று திருப்பணிக்கு நிதி சேகரித்தார். வெளிநாடுகள் (மலாயா, சிங்கப்பூர்) உள்ளூர், வெளியூர்களிலுள்ள அடியவர்களின் ஒத்துழைப்புடன், தன் தமையனார் தொடங்கிய ஆலய திருப்பணியைத் தொடர்ந்து செய்வாராயினர்.

ஆலயத்தின் பிரதான மண்டபங்கள் - கருவறையிலிருந்து ஸ்நபன மண்டபம் வரை, இராசகோபுர அடித்தளம் (வியாளவரிசை) மணிக்கூட்டுக் கோபுரம், முன் சுவர்கள், தீர்த்தக்கேணி போன்றவை வைரக்கற்களால் அமைக்கப்பட்டன. பரிவார மூர்த்திகள் எழுந்தருளப் பிரகார்ங்கள், கட்டப்பட்டன. கொடித்தம்ப மண்டபம், தரிசனமண்டபம் போன்ற ஏனைய மண்டபங்களுடன் பல திருப்பணி வேலைகள் நடைபெற்று ஆலயம் விஸ்தீரணமாகக் கட்டப்பட்டது.

ஆலயத்தின் சில மண்டபங்கள், பிரகாரங்கள், கோபுர வாசலின் அடித்தளம் (வியாள வரிசை) மதில்கள், போன்றவைகளை அடியார்கள் தம் உபயமாகச் செய்து காணிக்கையாக்கினர். இத்திருப்பணிகளில் அவரவர் செய்த உபயங்களில், அவர்களின் பெயர்கள், திருப்பணி விபரம் ஆகியன அடங்கிய கற்சாசனங்கள் பதிக்கப்பட்டுள்ளன.

திரு. ச. கணபதிமுத்துச்சாமி அவர்கள் இந்தியாவின் காசியிலிருந்து, இந்த ஆலயத்தில் பிரதிஸ்டை செய்வதற்கெனப் பஞ்சலோகங்களிலான திருவுருவங்கள், மற்றும் பஞ்சலிங்க மூர்த்திகள், விஸ்ணு, முருகப்பெருமான், துர்க்கைஅம்மன், இலக்குமி, சரஸ்வதி, சமயகுரவர் முதலியோரின் கருங்கல்லிலான திருவுருவங்களுடன் கோவிலுக்கு வேண்டியனவற்றையும் கொண்டு வந்தார்.

திரு உருவங்கள், கோவிலில் அமைக்கப்பட்ட உரிய இடங்களிற் பிரதிஸ்டை செய்யப்பட்டன. ஆலயத்திற் செய்யப்பட வேண்டிய பிரதான திருப்பணிகள் சிறப்புற நிறைவேற்றப்பட்டன. கோவிலுக்கு வேண்டிய ஏனைய பொருட்கள் கொள்முதல் மற்றும் காணிக்கை முதலியனவற்றின் மூலம் கிடைக்கப்பெற்றன.

மீளமைக்கப்படும் இந்த ஆலயத்துக்கு முன் இருந்த இரண்டாம் கோவிலில் முதன் முதலாக (கி.பி1890 இல்) ஆலய நிறுவுநராம், சிவத்திரு. சு. கதிர்காமஞானி அவர்களால் மூல மூர்த்தியாகப் பிரதிஸ்டை செய்யப்பட்ட ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரர் என்னும் திருநாமத்தைத் தாங்கிய காசியிலிருந்து கொண்டு வரப்பட்ட சுயம்புலிங்கமூர்த்தியே மூல மூர்த்தியாக, இந்த ஆலயத்திலும் மீண்டும் எழுந்தருள் செய்யப்பட்டார். ஸ்ரீசிவகாமி அம்பாள், பிள்ளையார் போன்ற திருவுருவங்கள் மீண்டும், முன் எழுந்தருளியிருந்த பிரகாரம், மண்டபங்களிற் பிரதிஸ்டை செய்யப்பட்டனர்.

வைரக்கற்களால் மீளமைக்கப்பட்ட இந்த (இக்கால) ஆலயத்தில், புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் கி.பி 1912ஆம் ஆண்டில் மங்களகரமாக நடைபெற்றது.

பிரதிஸ்டா குரு:- சிவஸ்ரீ வைரவநாதக்குருக்கள். (கோப்பாய்)
ஆலய குரு:- சிவஸ்ரீ. பா(வா). நடராசாக்குருக்கள்

மீளமைக்கப்பட்ட இக் கோவில், விஸ்தீரணமாகக் கட்டும் பொழுது, இடம் போதாமல் இருந்தது. இந்நிலையில் திரு.ச.கணபதிமுத்துச்சாமி அவர்களுக்கும், ஆலயத்தில் அர்ச்சகர்களாக (பூசகர்களாக) நியமிக்கப்பட்டிருந்த பிரம்மஸ்ரீ ச. பா.(வா)லசுப்பையர் குடும்பத்தினருக்கும் இருந்த ஒற்றுமையினால், ஆலயத்தின் மேற்குப் பகுதியில் உள்ள நிலத்தின் ஒரு பகுதி, பிரம்மஸ்ரீ ச. பா(வா)லசுப்பையரின் குடும்பத்தினராற் கோவிலுக்கு கொடுக்கப்பட்டது. இந்நிலம் பரநிலைப் பரப்பு ஒன்றரை (11/2) ஆகும்.

இந்த நிலத்தில், ஆலயத்தை உரிமையுடன் பராபரிப்பவர்கள், அடியார்களின் ஆதரவுடன், பிள்ளையார், பஞ்சலிங்கங்கள், விஸ்ணுமூர்த்தி, பிரதோசமூர்த்தி, முருகப்பெருமான், இலக்குமி, சரஸ்வதி, சமய குரவர் ஆகியோருக்குக் கோவிலோடு சேர்ந்த பிரகாரங்களை 1910ஆம் ஆண்டில் கட்டினார்கள். இப் பிரகாரங்கள் எல்லாம், தனித்தனி உபயமாக, அடியார்களாற் காணிக்கை செய்யப்பட்டன. இத்திருப்பணி உபயகாரர்களின் பெயர்கள், அவர் அவர் கட்டுவித்த பிரகாரங்களில், கற்சாசனத்திற் பொறிக்கப்பட்டன.

மிகுதியாக இருந்த நிலம், ஆலயத்தின் இரண்டாம் வீதியின், மேற்குப்புற வீதியாகப் பாவனையில் அமைந்துள்ளது.

இந்த நிலத்தில் ஆலயத்தைச் சார்ந்தவர்களால், ஆலயத்தின் தேவையின் பொருட்டு சில (குறிப்பிட்ட) கட்டிடங்கள் நிர்மாணித்தும், இறைவன், திருவுலா வருவதற்காக வீதி அமைத்தும் பாவிக்கப்பட்டமையால், சிவஸ்ரீ பா(வா)நடராசாக்குருக்கள், நீதி மன்றத்தின் மூலம், நிலத்தின் பெறுமதித் தொகையை (நட்டஈட்டை) அவர்களிடமிருந்து பின்னாளிற் பெற்றுக் கொண்டார்.

இச் செயற்பாட்டைப்பற்றி, சிவஸ்ரீ. பா. நடராசாக்குருக்கள் அவர்களின் வம்சவழி களினால் வழக்கு இலக்கம் 17291இல் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. இதனால் இழப்பீடு கொடுக்கப்பட்டதுடன், இந்த நிலம் ஆலயத்தின் ஆட்சிக்குட்பட்டதாகியுள்ளது.

இந்த ஆலயத்தில், மகா கும்பாபிஷேகம் நிறைவுற்ற பின், 1913 ஆம் ஆண்டில் மகோற்சவம் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நித்திய, நைமித்திய பூசைகளுக்கும், மகோற்சவத்திற்கும் வேண்டிய பட்டோலை ஆலய அர்ச்சகர் (பூசகர்), தர்மகர்த்தாக்கள் ஆகியோரால் தயாரிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்நிலையில், கொடியேற்றக் குருக்கள், உபயகாரர் யார், யார் என்பதில் ஆலய தர்மகர்த்தாக்கள், வழிபடுவோர், ஆலய அர்ச்சகர் ஆகியோருக்கிடையில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. இதற்குத் தகுந்த தீர்வு காணப்படமுன், எதிர்பாராத விதமாக, ஆலயத்தில் நிகழ்ந்த சம்பவம், ஆலய சமூகத்தின் மனதை வேதனைப்படுத்தியது. இந்நிலையில் விசாரணையின் பின் அரசாங்க அதிபரின் கட்டளைக்கு அமைய மகோற்சவம் நிறுத்தப்பட்டது. இந் நிகழ்வின் பின் நிர்வாகம், பூசை வழிபாடுகளில் தாக்கங்கள் பல ஏற்பட்டன.

## பொதுக் கோவில் – பராபரிப்புக்காரன் – மனேச்சர் நியமனம்

இந்த ஆலயத்தின் சொந்த (உரிமைக்) காரர்களும், பராமரிப்புக்காரர்களும், அமரர்கள் சு. ஆறுமுகம் பரமானந்தி தம்பதிகளின் புத்திரிகளுமாகிய திருமதி. வி. பறுபதப்பிள்ளை (காசிநாதர் விசுவநாதர் கைம்பெண்), திருமதி. வி. தங்கமுத்து, மற்றும் இவரின் கணவன் திரு. அம்பலவாணர் விசுவநாதர், ஆகியோர், தங்களால் இந்த ஆலயத்தைத் தனியாக நின்று பராபரிக்க முடியாது என்று உணர்ந்தனர்.

இந்நிலையில், ஆலய வழிபடுவோர்கள், ஆலய திருப்பணியிற் காட்டிய ஊக்கத்தையும், பக்தி ஆர்வத்தையும் கண்ட இவர்கள், இந்தக் கோவிலைப் பொதுக் கோவிலாக்கி, வழிபடுவோர்களிடம் கையளிப்பதே தக்கது என்று தீர்மானித்தார்கள்.

இதற்கமைய, இவர்கள் ஆலய திருப்பணிகளில் ஈடுபட்டவர்களையும், ஊர் மக்கள் - வழிபடுவோர் ஆகியோர்களையும் கூட்டினர். இவர்கள் ஆலயத்தை நிர்வகிப்பது பற்றி ஆராய்ந்தார்கள். ஆலயத்தைப் பொதுக் கோவிலாக்கி, மனேச்சர் ஒருவரை நியமித்து, அவர் மூலம் ஆலயத்தைப் பராமரிப்பது என்று ஏகமனதாக அவர்கள் தீர்மானித்தார்கள்.

இத் தீர்மானத்துக்கமைய, 25-06-1914 அன்று நடைபெற்ற வழிபடுவோர் சபைக் கூட்டத்தில், திரு. அம்பலவாணர் விசுவநாதர், அவரின் மனைவி திருமதி. வி. தங்கமுத்து, மற்றும் திருமதி. பறுபதப்பிள்ளை விசுவநாதர், ஆகியோர் தங்களுக்கு இருந்த ஆட்சி உரிமையை, வழிபடுவோர்களிடம் ஒப்படைத்து, ஆலயத்தைப் பொதுக் கோவிலாக்கினார்கள். ஆலயத்துக்குரிய ஆதனங்களும், இவர்களால் வழிபடுவோர் சபையில் கையளிக்கப்பட்டது. இதற்குரிய உறுதியும் இவர்களால் எழுதப்பட்டது.

இவர்களும், வழிபடுவோர் சபையிற் சமூகமளித்த வழிபடுவோர்களுமாகச் சேர்ந்து, இந்த ஆலயத்தைப் பராமரிப்பதற்குத் திரு. இராமலிங்கம் இரகுநாதர் (சின்னத்துரை உடையார்) (விதானை - இன்றைய கிராமசேவகர்பதவி) அவர்களைப் பராமரிப்புக்காரன் (மனேச்சர்) பதவிக்குத் தெரிவு செய்தனர்.

இதன் பொருட்டு, சிவன் கோவில் திருக்குள அமிர்தபுஷ்பகரணி மண்டபத்தில், இலக்கம் 14194இல், பராமரிப்புத் தத்துவ உறுதி, நொத்தாரிஸ் அருணாசலம் சிதம்பரப்பிள்ளை முகதாவில், ஆலய உரிமையாளர்களான திரு. அ. விசுவநாதர், திருமதி வி. தங்கமுத்து, திருமதி. வி. பறுதப்பிள்ளை, மற்றும் வழிபடுவோர் சபை உறுப்பினர்கள் ஆகியோரால், ஆயிரத்துத் தொழாயிரத்துப் பதின்நாலாம் ஆண்டு, ஆனி மாதம், இருபத்தைந்தாம் திகதி, (1914.06.25) எழுதப்பட்டது. திரு. சபாபதியார் சுப்பிரமணியம், திரு. தம்பிநாதர் தில்லையம்பலவாணர் ஆகியோர் இதற்குச் சாட்சிகளாவர்.

இச் செயற்பாட்டினால், இலக்கம்– 14194 - உறுதி மூலம்,

1. இந்த ஆலயம் பொது ஸ்தாபனம் (பொதுக் கோவில்) ஆகியது.
2. திரு. இராமலிங்கம் இரகுநாதர் (உடையார் விதானைார்) இக்கோவிலின் மனேச்சர் (பராமரிப்புக்காரர்) நியமனத்தைப் பெற்றார்.
3. ஆலயத்தைப் பராமரிப்பதற்கு வேண்டிய அதிகாரங்களையும் இவர் பெற்றார்.

இந்த ஆலயம் மற்றும் இங்கு நடைபெற்ற இச் செயற்பாடுகள் பற்றிய விசாரணை நடைபெற்றது. இலக்கம் 11647இன் வழக்குத்தீர்ப்பு கோவிலுக்குச் சார்பாக வழங்கப்பட்டது.

இக் கோவிலுக்கு, யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட் (மாவட்ட நீதி மன்றம்), 11647 இலக்க வழக்குத் தீர்வைப்படியும், 1914ஆம் ஆண்டு ஆனி மாதம் 25ஆம் திகதி 14194 இலக்கத்தில் முடித்த பராபரிப்புத் தத்துவ உறுதியின் படியும், புதிதாகப் பராமரிப்புக்காரனைத் தெரிவு செய்யும் பொருட்டு, 1921ஆம் ஆண்டு பங்குனி மாதம் 3ஆம் திகதி (1921-03-03) வழிபடுவோர் சபையினர் கூடினர்.

ஏறக்குறைய 6 1/2 ஆண்டுகள் ஆலய பராமரிப்புக் காரனாகக் கடமையாற்றிய, திரு. இ. இரகுநாதர் விதானையாரும், மற்றும் வழிபடுவோர் சபையினரும் சேர்ந்து இக் கோவிலின் பராபரிப்புக் காரனாக முதலியார் காசிநாதர் வயித்திலிங்கம் மார்க்கண்டர் அவர்களைத் தெரிவு செய்தனர்.

நொத்தாரிஸ் அருணாசலம் சிதம்பரநாதபிள்ளை முகதாவில், 21894ஆம் இலக்கத்தில், ஆயிரத்துத் தொழாயிரத்து இருபத்தொராம் ஆண்டு பங்குனி மாதம் மூன்றாம் திகதி (1921-.03-03) வழிபடுவோர் சபையோரினால் எழுதப்பட்ட பராபரிப்புத் தத்துவஉறுதி மூலம் திரு. காசிநாதர் வயித்திலிங்கம் மார்க்கண்டர் அவர்கள், ஆலய பராபரிப்புக்காரனாக நியமனம் பெற்றார்.

திரு. சபாபதியார் சுப்பிரமணியம், திரு. தம்பிநாதர் தில்லையம்பலவாணர் ஆகியோர் இச் செயற்பாட்டிற்குச் சாட்சிகளாவர்.

திரு. கா. வ. மார்க்கண்டர் அவர்கள் ஏறக்குறைய 11½ வருடங்கள் ஆலய பரிபாலனத்தைப் பொறுப்பேற்றுப் பணி செய்த பின், அவரும், வழிபடுவோர் சபையினரும் சேர்ந்து திரு. சங்கரப்பிள்ளை கணபதிமுத்து அவர்களை ஆலய பரிபாலகராகத் தெரிவு செய்தனர்.

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்திரண்டாம் ஆண்டு புரட்டாதி மாதம் இருபத்தோராம் திகதி (1932-09-21), நொத்தாரிஸ் வேலுப்பிள்ளை நாகலிங்கம் முகதாவில், இலக்கம் 3670இல் எழுதப்பட்ட பராபரிப்புத் தத்துவ உறுதி மூலம், திரு. சங்கரப்பிள்ளை கணபதிமுத்து அவர்கள், ஆலய பராபரிப்புக்காரனாகப் பதவி ஏற்றார். இந்நியமனத்துக்கு, திரு. குழந்தைவேலு நாகலிங்கம், திரு. சிற்றம்பலம் சபாரத்தினம் ஆகியோர் சாட்சிகளாவார்கள்.

கி.பி 1940ஆம் ஆண்டில், ஆலயத்தின் பராமரிப்புக்காரனாக இருந்த திரு. சங்கரப்பிள்ளை கணபதிமுத்து அவர்களும், மற்றும், வழிபடுவோர் சபையினர், ஊரவர்கள் 01-12-1940இல் ஒன்று சேர்ந்துக் கூட்டங்கூட்டித் திரு. தில்லையம்பலம் கந்தையா அவர்களை ஆலய பராபரிப்புக்காரனாகத் தெரிவு செய்தனர்.

திரு. தில்லையம்பலம் கந்தையா அவர்கள், ஆயிரத்து தொளாயிரத்து நாற்பதாம் ஆண்டு, மார்கழி மாதம் ஒன்பதாம் திகதி (1940-12-09), நொத்தாரிஸ் ஆறுமுகம் சிதம்பரப்பிள்ளை இரகுநாதன் முகதாவில் இலக்கம்– 1488இல் எழுதப்பட்ட பரிபாலனதத்துவம் (ரிறஸ்ரி நியமனம்) என்னும் உறுதி மூலம் ஆலய பரிபாலகர் / பராபரிப்புக்காரன் (மனேச்சர்) பதவிக்கு நியமனம் பெற்றார்.

இந்த உறுதி மூலச் செயற்பாட்டிற்குத் திரு. சபாபதியார் அப்பாப்பிள்ளை, பொன்னம்பலம், திரு. சின்னப்பு பொன்னுத்துரை ஆகியோர் சாட்சிகளாவர்.

திரு. தில்லையம்பலம் கந்தையா அவர்களின் காலத்துக்குப் பின், பராபரிப்புக்காரன் (மனேச்சர்) என்னும் பதவி இந்த ஆலயத்தில் நீக்கப்பட்டது.

இந்த ஆலயத்தைப் பராபரிப்பதற்கு நியமிக்கப்பட்ட பராபரிப்புக்காரர்கள் அனைவரும், பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டனர். உள்ளும், புறமும் இருந்த சூழல்களில் நிகழ்ந்த சம்பவங்கள், பராமரிப்பாளர்கள், ஆலயத்தைச் சிறந்த முறையிற் பராபரிப்பதற்குப் பெரும் சிரமங்களைக் கொடுத்தன இவை இந்த ஆலய வளர்ச்சிக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. காலத்திற்குக்காலம் பல்வேறு இடர்களை எதிர்நோக்கிய பொழுதிலும், ஆலய பரிபாலகர்கள் தங்கள் திறமைகளுக்கேற்ப ஆலயத்தைப் பரிபாலித்தார்கள். குறிப்பிடத்தக்க வெற்றிகளையும் பெற்றனர். எனினும் ஆலயத்தின் வளர்ச்சி திருப்தியளிக்கக் கூடியதாக இருக்கவில்லையெனலாம்.

ஆலய பரிபாலனத்துக்குரிய முழு அதிகாரங்கள் மனேச்சர் (பராமரிப்புக்காரன்) என்ற பதவியிலுள்ள ஒருவரிடம் குவிந்திருக்கும் முறை, இந்த ஆலயத்துக்குப் பொருத்தமானதல்ல

என்பதை வழிபடுவோர் கடந்த காலங்களில் நிகழ்ந்தவைகளிலிருந்து நன்கு உணர்ந்து கொண்டனர். ஆகவே, இப் பதவியை இல்லாதொழித்து, விடுதலே சிறந்ததென்று அவர்கள் கருதினார்கள். இதற்கு மாற்றீடாக, நிர்வாக சபையே (பரிபாலன சபையே) ஆலயத்தைப் பொறுப்பேற்றுப் பரிபாலிக்க வேண்டும் என்றும், அச் சபை ஏற்புடைய சட்டதிட்டங்களை வகுத்துச் செயற்பட வேண்டும் என்றும், இதனால் ஆலயம் வளர்ச்சியடையும் என அவர்கள் திடமாக நம்பினார்கள்.

# ஆலய பரிபாலன சபை

## தோற்றம்

ஆலயத்தின் வழிபடுவோர்கள், பொது மக்கள் ஆகியோரின் எண்ணக் கருத்துக்களுக்கு மதிப்பளித்து, திரு. செ. சுப்பிரமணியம் (பிறேஸ் மணியம்), திரு. வ. கந்தையா, திரு. க. அருள்சுப்பிரமணியம் ஆகியோரின் ஊக்கத்தினால், வழிபடுவோர்கள் அழைக்கப்பட்டு, திரு. மார்க்கண்டு தில்லையம்பலம் அவர்களின் உதவியால், 27-12-1942இல் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது.

இக் கூட்டத்தில், ஆலயத்தின் நிலைமை ஆராயப்பட்டு, ஒரு சபையே ஆலயத்தைப் பொறுப்பேற்று நடத்த வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய "சித்தன்கேணி சைவ சித்தாந்த சங்கம்" என்னும் சங்கத்தை இச்சபையினர் அமைத்தனர்.

எனினும், 18-01-1943 அன்று கூட்டப்பட்ட பொதுக் கூட்டத்தில் 27-12-1942இல் அமைக்கப்பெற்ற சங்கம் கலைக்கப்பட்டது. அதற்கு மாற்றீடாக, இச் சபையினர், இக் கூட்டத்தில் எடுத்த தீர்மானத்தின் படி "சித்தன்கேணி ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரர் ஆலய பரிபாலன சபை" யை அமைத்தனர்.

ஆலய வழிபடுவோர் சபை "சித்தன்கேணி ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரர் ஆலய வழிபடுவோர் சபை" என்றும், ஆலய பரிபாலன சபை "சித்தன்கேணி ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரர்" ஆலய பரிபாலன சபை என்றும் அழைக்கப்படுகின்றன.

இப்பரிபாலன சபையின் தலைவராக திரு. மாரிமுத்து கனகசபாபதி அவர்களும், செயலாளராக (காரியதரிசி) திரு. செல்லப்பா சுப்பிரமணியம் அவர்களும், பொருளாளராக (தனாதிகாரி) திரு. நா. நடராசா அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆலய பரிபாலன சபை என்னும் சபை தோற்றம் பெற்றாலும், ஆலயத்தில் ஏற்கனவே இருந்த மனேச்சர் (பராமரிப்புக்காரன்) என்ற பதவி நீக்கப்படவில்லை. இதற்கு ஆலயம் சம்பந்தமான அக்காலத்தில் நடைபெற்ற வழக்குக் காரணமாகும். ஆகவே மனேச்சரும், ஆலய பரிபாலன சபையும் இணைந்து ஆலயத்தைப் பராபரிப்பாலாயினர்.

08-09-1946 அன்று ஆலய மண்டபத்தில் கூடிய வழிபடுவோர் சபைக் கூட்டத்திலும் ஆலய பரிபாலன சபைத் தலைவராகத் திரு. மாரிமுத்து கனகசபாபதி அவர்களும், திரு. செல்லப்பா சுப்பிரமணியம் அவர்கள் காரியதரசி (செயலாளர்)யாகவும், திரு. நா. நடராசா அவர்கள் பொருளாளர் (தனாதிகாரி) யாகவும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுடன் சேர்த்து பதினேழு (17) பேர் இச்சபைக்கு அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களின் நியமனம், அன்றே (அத்தினத்திலேயே) நொத்தாரிஸ் நாகநாதர் ஏகாம்பரம் முகதாவில் 352ஆம் இலக்கத்தில் எழுதப்பட்ட நியமன உறுதி மூலம் உறுதி செய்யப்பட்டது.

ஆலய பரிபாலனத்தின் பொழுது பூசகர், சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கிடையில் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டன. சில செயற்பாட்டு நிகழ்வுகள் காரணமாக நடைபெற்ற ஆட்சி ஒப்ப வழக்கின் 1951ஆம் ஆண்டுத் தீர்ப்பின்படி கோவில் நிர்வாகம் பரிபாலன சபைக்கே உரிமையாயிற்று. இத் தீர்ப்பில், பூசகர், முகாமையாளர்கள், பரிபாலன சபைக்குக் கட்டுப்பட்டு நடக்காவிடின், அவர்களை நீக்கவோ, தண்டனை வழங்கவோ பரிபாலன சபைக்கு முழு தத்துவமும் உடையது எனத் தெளிவாக்கப்பட்டது. இதன் பின்னர் அனைவரும் ஒன்றிணைத்து சிறப்புடன் ஆலயத்தைப் பராமரித்தனர்.

இவ்வாலயத்தில் மனேச்சராக (பரிபாலகராக)ப் பதவிவகித்த திரு தில்லையம்பலம் கந்தையா அவர்கள் 1959ஆம் ஆண்டில் காலமானார். 1951ஆம் ஆண்டு ஆட்சி ஒப்ப வழக்கின், தீர்ப்பு ஆலயத்தைப் பராமரிக்கும் உரிமை ஆலய பரிபாலன சபைக்கு வழங்கியதற்கமைவாகவும் 1942 மற்றும் 1943ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் படியும் இன்று வரை ஆலய பரிபாலன சபையே ஆலயத்தின் பரிபாலனத்தைச் செய்து வருகின்றது.

ஆலய மண்டபத்தில், 27-06-1959இல் கூட்டப்பட்ட வழிபடுவோர் சபைக் கூட்டத்தில் புதிய பரிபாலன சபையின் அங்கத்தவர்கள் தேர்வு நடைபெற்றது. பரிபாலன சபையின் தலைவராக டாக்டர் கணபதி முத்து காசிநாதன் அவர்களும் செயலாளராகத் திரு. ச. பாலசிங்கம் அவர்களும், பொருளாளராகத் திரு. ச. கந்தையா அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். பின்னாளில், திரு. ச. பாலசிங்கம் அவர்களின் பின், திரு. செல்லப்பா சுப்பிரமணியம் அவர்கள் செயலாளர் பொறுப்பை ஏற்றார்.

இப்பரிபாலன சபைக்கு அவர்களுடன் சேர்ந்து நாற்பத்திமூன்று பேர்கள் அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள். இந்த நியமனம் நொத்தாரிஸ் சிற்றம்பலம் குமாரசுவாமி முகதாவில் 18-01-1960 ஆம் ஆண்டில் 308 இலக்கப் பரிபாலன தத்தவ உறுதி மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. திரு. செல்லப்பா சுப்பிரமணியம், திரு. நவரத்தினம் இராசரத்தினம் ஆகியோர் இதற்குச் சாட்சிகளாவர்.

விசுவாச வருடம் ஆவணி மாதம் ஆறாம் நாள் (22-08-1965) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆலய வழிபடுவோர் சபைக் கூட்டத்தில், திரு. வே. முத்துக்குமாரு அவர்கள் தலைவராகவும் திரு. செ. சுப்பிரமணியம் அவர்கள் காரியதரசியாகவும், திரு. ச. கந்தையா அவர்கள் தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுடன் சேர்ந்த முப்பத்தொன்பது

பேர்கள் பரிபாலன சபையின் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். திரு. வே. முத்துக்குமாரு அவர்கள் தலைவர் பதவியிலிருந்து விலகியமையால், திரு. மு. க. சுப்பிரமணியம் (சட்டத்தரணி) அவர்கள் 04-12-1966 ஆம் ஆண்டு நடைபெற்ற வழிபடுவோர் சபைக் கூட்டத்திற் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இப் பரிபாலன சபை முப்பத்தொன்பது (39) உறுப்பினர்களை உள்ளடக்கியது.

1967ஆம் ஆண்டு சித்திரை மாதம் தொடக்கம், 1972ஆம் ஆண்டு பங்குனி மாதம் வரை (01-04-1967 - 31-03-1972), ஆலயத்தைப் பரிபாலித்த பரிபாலன சபையில், தலைவர் திரு. மு. க. சுப்பிரமணியம் (சட்டத்தரணி), செயலாளர்:- திரு. கு. நடராசா, பொருளாளர்:- திரு வ. க. நாகலிங்கம், ஆகியோருடன் சேர்த்துப் பதினைந்து உறுப்பினர்கள் அங்கத்துவம் வகித்தனர்.

01-04-1972 – 31-05-1979 வரை, திரு மு. க. சுப்பிரமணியம் - தலைவராகவும், திரு. கு. நடராசா – செயலாளராகவும், திரு. சீ. வே அருணாசலம் - பொருளாளராகவும் பதவிகள் வகிக்க, இவர்களுடன் சேர்ந்து இருபத்தொரு (21) உறுப்பினர்கள், ஆலயத்தைப் பரிபாலித்தனர்.

1979ஆம் ஆண்டு, வைகாசி மாதம், 12ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற வழிபடுவோர் சபைக் கூட்டத்தில், முன்னைய பரிபாலன சபையினரே தொடர்ந்தும் இயங்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய, 03-06-1979இல் நடைபெற்ற நிர்வாக சபைக் கூட்டத்தில், தலைவராகத் திரு. மு. க. சுப்பிரமணியம் (சட்டத்தரணி) அவர்களும் செயலாளராகத் திரு. கந்தையா வேலாயுதபிள்ளை அவர்களும், பொருளாளராகத் திரு. சீ. வே. அருணாசலம் அவர்களும், தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுடன் சேர்த்து இருபதுஅங்கத்தவர்களை இப்பரிபாலன சபை கொண்டிருந்தது. இச் சபைக்குச் சட்டபூர்வ உறுதி, இலக்கம் 331இல், நொத்தாரிஸ் பரமகுரு இராசகுரு முகதாவில், 01-11-1979இல் எழுதப்பட்டது.

திரு. சுப்பிரமணியம் தியாகராசா, திரு. செல்லத்துரை சிவயோகநாதன் ஆகியோர் இதற்குச் சாட்சிகளாவார்.

30-03-1986ஆம் ஆண்டு ஞாயிற்றுக்கிழமை கூடிய பொதுச் சபைக் கூட்டத்தில் திரு. மு. க. சுப்பிரமணியம் (சட்டத்தரணி) அவர்கள் தலைவராகவும் திரு தர்மராசா அவர்கள் செயலாளராகவும் திரு சோ. தெய்வேந்திரம் அவர்கள் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் அடங்கிய ஆலய பரிபாலன சபை ஆலயத்தைப் பொறுப்பேற்றது.

11-06-2000ஆம் ஆண்டு நடைபெற்ற வழிபடுவோர் சபைக் கூட்டத்தில் திரு சோ. தெய்வேந்திரம் அவர்களைத் தலைவராகவும் திரு வே. கணேசன் அவர்களைச் செயலாளராகவும் திரு வி. க. விஜயரத்தினம் அவர்களைப் பொருளாளராகவும் அடங்கிய இருபத்தொரு (21) அங்கத்தவர்களைக் கொண்ட ஆலய பரிபாலன சபை ஆலயத்தைப் பராமரித்தது.

27-05-2008ஆம் ஆண்டு சனிக்கிழமை ஆலய மண்டபத்தில் நடைபெற்ற வழிபடுவோர் சபைக் கூட்டத்தில் திரு வி. க. விஜயரத்தினம் அவர்கள் தலைவராகவும் திரு ச. ஐங்கரன் அவர்கள் செயலாளராகவும் திரு க. அருட்செல்வன் அவர்கள் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர் அவர்களுடன் அடங்கிய (21) இருபத்தொரு அங்கத்தவர்களைக் கொண்ட ஆலய பரிபாலன சபை ஆலயத்தைப் பொறுப்பேற்றுப் பராபரித்தது.

திரு வி. க. விஜயரத்தினம் அவர்கள் தலைவர் பதவியிலிருந்து 2009ஆம் ஆண்டின் இறுதியில் விலகியமையால் 10-01-2010ஆம் ஆண்டு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பரிபாலன சபைக் கூட்டத்தில் (மகா கும்பாபிஷேகம் பற்றி ஆராய்வதற்கு) திரு தி. இராசகுமாரன் அவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டார்.

14-08-2016ஆம் ஆண்டு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வழிபடுவோர் மகா சபைக் கூட்டத்தில் திரு து. கோணேசநாதன் அவர்கள் தலைவராகவும் திரு கு. குலரத்தினம் அவர்கள் செயலாளராகவும் திரு ச. ஐங்கரன் அவர்கள் பொருளாளராகவும் நியமனம் செய்யப்பட்டனர். அவர்களுடன் சேர்த்து இருபத்தொரு அங்கத்தவர்களைக் கொண்ட புதிய பரிபாலன சபை ஆலயத்தைப் பரிபாலிக்கும் பொறுப்பை ஏற்றுப்பரிபாலித்து வருகிறது,

திரு து. கோணேசநாதன் அவர்களும் திரு ச. ஐங்கரன் அவர்களும் தாம் வகித்த பதவியிலிருந்து விலகியமையால் முறையே திரு பா. சுதேந்திரன் அவர்கள் தலைவராகவும் திரு வி. க. விஜயரத்தினம் அவர்கள் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். திரு வி. க. விஜயரத்தினம் இயற்கை எய்தியதால் திரு க. ஸ்கந்தராசா அவர்கள் பொருளாளராக நியமனம் பெற்றார்.

இப் பரிபாலன சபையில் சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழக தலைவரும் செயலாளரும் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

## ஆலய பரிபாலன சபையின் காலங்களில் பின்வரும் பதவிகளில் நியமனம் பெற்றோர் விபரம்

### உப–தலைவர்கள்:

திரு அ. சோமசுந்தரம், திரு மு. க. சுப்பிரமணியம், திரு மு. அருணாசலம், திரு வே. அருணாசலம், திரு சி. பரமலிங்கம், திரு இ. இரட்சகன், திரு சி. திருச்செல்வம், திரு வே. கணேசன், திரு தி. இராசகுமாரன், திரு செ. ஜெயானந்தன், திரு ச. தர்மலிங்கம், திரு து. கோணேசநாதன், திரு வி. க. விஜயரத்தினம், திரு பா. சுதேந்திரன், திரு மா. தவக்குமார், திரு சு. தியாகராசா



**உப-செயலாளர்:**

திரு கு, நடராசா, திரு க. வேலயுதபிள்ளை, திரு பா. விஜயகுமார், திரு க. மயில்வாகனம், திரு சோ. சாம்பசிவம், திரு க. ஸ்கந்தராசா, திரு மு. சவுந்தரசண்முகநாதன்

**உப-பொருளாளர்:**

திரு வ. க. நாகலிங்கம், திரு ச. அம்பலவாணர், திரு அ. சோமசுந்தரம், திரு மு. கதிர்காமநாதன், திரு து. கோணேசநாதன்

**ஆலய வழிபடுவோர் சபையின் பிரமாணங்கள்:**

இந்த ஆலயத்தில் 27-12-1942ஆம் ஆண்டில் கூட்டப்பட்ட வழிபடுவோர் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் ஆலயத்தைப் பொறுப்பேற்று நடத்தவதற்கு ஒரு சபை (நிர்வாக சபை – பரிபாலன சபை) யை அமைப்பதெனவும் அச்சபைக்கு அமைப்பு விதிகளும் தயாரிப்பதென்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது அதற்கமைய அமைப்பு விதிகளும் தயாரிக்கப்பட்டு 18-01-1943ஆம் ஆண்டில் கூட்டப்பட்ட பொதுக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சமுதாய மாற்றங்களுக்கு அமைவாகவும் தேவைகள் கருதியும் 06-09-1959, 03-06-1979, 14-08-2016 ஆகிய காலங்களில் பொதுச் சபையால் அமைப்பு விதிகளிலும் வேண்டிய மாற்றங்கள், உள்ளடக்கங்கள் ஆலய பரிபாலன சபை சிறப்புடன் இயங்குவதற்கு ஏதுவாகச் செய்யப்பட்டன.

இந்த விதிகள் ''சித்தன்கேணி ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரர் ஆலய வழிபடுவோர் சபையின் பிரமாணங்கள்'' என்றழைக்கப்படுகின்றது. இந்தப் பிரமாணங்கள் (விதிகள்) இருபத்தெட்டு (28) அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

இந்த அமைப்பு விதிகளும் (பிரமாணங்களும்) இன்றும் ஆலயத்தில் நடைமுறையிலுள்ளது.

## அர்ச்சகர் நியமனம்

திருநிறை செல்வர் திரு சு. கதிர்காமஞானி அவர்கள் இத்தலத்தில் முதன்முதல் மடாலயம் அமைத்துச் சிவ வழிபாட்டை ஆரம்பித்த பொழுது அவரால் முதல் அர்ச்சகராக (இவ்வாலயத்துக்கு) பிரம்மஸ்ரீ ச. பாலசுப்பையர் (பாலசுப்பிரமணியஐயர்) அவர்கள் நியமிக்கப்பட்டார். இவரைத் தொடர்ந்து இவரின் மகன் சிவஸ்ரீ பா. நடராசக்குருக்கள் அவர்களும் இவரின் பின் மருமகன் (சகோதரி மகன்) சிவஸ்ரீ சா. இராமச்சந்திரக்குருக்கள் அவர்களும் இவருடன் இணைந்தும் பின்னர் தனித்தும் இவரின் மைத்துனன் பிரம்மஸ்ரீ த. ஞானபண்டிதக்குருக்கள் அவர்களும் அர்ச்சகர்களாகச் செயலாற்றினார்கள்.

பின் இருவரின் காலத்தில் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கமைய இவ்வாலயத்தில் பூசைக் கடமைகளைத் தொடர்ந்தும் இவர்களாற் செய்யமுடியாத நிலை ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்திற் சாதகமானதீர்ப்பைப் பெற்றஆலய மனேச்சர் (பரிபாலகர்) திரு. தி. கந்தையா அவர்கள் ஆலயத்தில் நிரந்தரமாகப் பூசைக் கடமைகளைச் செய்வதற்கு அர்ச்சகரை ஏற்பாடு செய்தார். எனினும் ஆலயச்சூழல் இவருக்குச் சாதகமாக அமைய (இருக்க) வில்லை. இதனால் நித்தியபூசை ஒழுங்கில் சிக்கல்களும் தடைகளும் ஏற்பட்டன. ஆலய நிர்வாகமும் சீர்குலையும் நிலைக்குத் தள்ளப்பட்டது. ஆலய வளர்ச்சிக்கு இவை தாக்கத்தை ஏற்படுத்தின.

இந்நிலையில் உதவி அரசாங்க அதிபர் அவர்களின் தலைமையில் நிலைமைகள் சீர்செய்யப்பட்டன. வயோதிப நிலையினால் இவர் மனேச்சர் பதவியினைத் தொடர்ந்து வகிக்க முடியவில்லை. ஆலய பரிபாலனத்தை இக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த ஆலய பரிபாலன சபை பொறுப்பேற்பதே சிறந்தது என்று தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய இவருடன் இணைந்து ஆலய பரிபாலனத்தைச் செய்த ஆலய பரிபாலன சபை ஆலயத்தை பரிபாலிக்கும் முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொண்டது.

ஆலய பரிபாலன சபையினர்; ஆலயத்தின் அர்ச்சகராக; ஏற்கனவே இந்த ஆலயத்தில் அர்ச்சகர் உரிமையை இழந்திருந்த போதிலும் சிவஸ்ரீ த. ஞானபண்டிதக்குருக்கள் அவர்களை அவரிடத்திலுள்ள மேலான பண்புகள்; செய்கைகள் காரணமாக நியமிக்கத் தீர்மானித்தனர் சிவஸ்ரீ சா. இராமச்சந்திரக்குருக்கள் அவர்கள் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு மா. கனகசபாபதி அவர்களிடம் ஆலய திறப்புக்களை ஒப்படைத்து இந்த ஆலய பூசைக் கருமங்களிலிருந்து விலகினார்.

அன்றே 08-05-1947இல் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு மா. கனகசபாபதி அவர்கள் சிவஸ்ரீ த. ஞானபண்டிதக்குருக்கள் அவர்களை ஆலய அர்ச்சகராக பரிபாலன சபை சார்பில் நியமித்து ஆலய திறப்புகளை அவரிடம் ஒப்படைத்தார். இவரின் இந்நியமனத்திற்கு ஆலய பரிபாலன சபைச் செயலாளர் (காரியதரிசி) திரு. செல்லப்பா சுப்பிரமணியம் அவர்களும் அவரின் குடும்பமும் வகித்த பாகம் மிகவும் பெரியதாகும்.

ஆலய பூசைகளை சிவபக்தியுடன் காலம் தவறாது செய்தும் ஆலய வளர்ச்சியில் பரிபாலன சபையுடனும் அடியார்களுடனும் சேர்ந்து பங்குபற்றியும் சேவைகளாற்றிய ‘‘பண்டிதர் ஐயா’’ என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட சிவஸ்ரீ த. ஞானபண்டிதக்குருக்கள் அவர்கள் 29-8-1982ஆம் ஆண்டில் சிவபதம் எய்தினார்.

இவரின் பின் ஆலய பூசைப் பொறுப்பிற்கு இவரின் மகன் பிரம்மஸ்ரீ ஞா. சபாரத்தினசர்மா அவர்களை ஆலய பரிபாலன சபையினர் 28.11.1982இல் நியமித்தனர். பிரம்மஸ்ரீ சபா. வாசுதேவசர்மா அவர்கள் தன் தந்தையுடன் இருந்து உதவி செய்தார். இவர் பூசைக் கடமைகளைச் செய்த பொழுதில் ஆலய அர்ச்சகராகவும் பின்நாளில் குருக்களாகவும்

ஆலய பரிபாலன சபையினரால் நியமிக்கப்பட்டார். (இவருக்கு இவரின் சகோதரர் பிரம்மஸ்ரீ ச. .உமாபதிசர்மா அவர்கள் உடனிருந்து உதவுவார்) இவ்வூரின் கோவில்களில் இரண்டாவதாகவும் இக்கோவிலில் முதன்முறையாகவும் நடைபெற்ற 33 குண்டபக்ஷ யாக மகா கும்பாபிஷேகத்தில் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து நடத்தினார்.

ஆலய வளர்ச்சிக்கு; ஆலய வழிபடுவோர் மகா சபையின் தீர்மானங்களுக்கமைய; ஆலய பரிபாலன சபையால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு; ஆலய குருக்கள் சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள் அவர்கள் இணங்க மறுத்தமையால்; அவர் தம் சுயவிருப்புடன் ஆலய பூசைக்கருமங்களிலிருந்து 27-12-2016இல் விலகினார்.

தற்போது ஆலயம் பரிபாலன சபையின் பூரண கண்காணிப்பில் அடியார்களின் வழிபாட்டிற்கு வழிசமைத்துள்ளது.

## திருப்பணிகளும் திருவுருவங்கள் பிரதிஷ்டைகளும்

தன உடை (தனவுடை) என்னும் இத்தலத்தில், கி.பி 1850ஆம் ஆண்டளவில், முதன் முதல், மடாலயம் அமைத்து “சிதம்பரம்அம்பலவாணசுவாமி”யைப் பிரதிஷ்டைசெய்து சிவ வழிபாட்டை ஆரம்பித்தசிவப்பிரியராம்உயர் திரு சுப்பிரமணியர் கதிர்காமஞானி அவர்கள் மீண்டும் மடாலயத்தை மீளமைத்து ஆலயமாக்கி காசியிலிருந்து கொண்டு வரப்பட்ட சிவலிங்கத்தை “ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரர்” என்னும் நாமத்துடன் கி.பி 1890ஆம் ஆண்டில் மூலவராகப் பிரதிஷ்டை செய்தார்.

இவரின் தமையன் சு. ஆறுமுகம் - பரமானந்தி குடும்பத்தின் ஒருவரான (மகள்) தங்கம் - விசுவநாதர் குடும்பத்தினர் கி.பி 1900 ஆண்டில் ஆலயத்தைப் புனர்நிர்மாணம் செய்து மகாகும்பாபிஷேகம் செய்தனர். இவையே இத்தலத்தில் நடைபெற்ற ஆரம்பகாலத் திருப்பணிகளும், திருவுருவங்கள் பிரதிஷ்டைகளுமாகும் இந்த ஆலயத்தின் திருப்பணிகள் எல்லாம் உரிமையாளர்களால் மட்டுமல்லாது, ஆலயம் பொது ஸ்தாபனமாக்கப்பட்ட பின்னர், மனேச்சர் (பரிபாலகர்) காலத்திலும், பிற்காலத்தில் ஆலய ஆட்சி பரிபாலனத்தை ஏற்ற ஆலய பரிபாலன சபையின் இக்காலம் வரையிலும் இவர்களினாலும் அடியவர்களினாலும் செய்யப்பட்டு வருகின்றன.

ஆலயத்தின் இரண்டாம் பிரகாரத்தில் 1906ஆம் ஆண்டு வசந்த மண்டபம் அமைக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் இம்மண்டபம் மீளமைக்கப்பட்டது.

ஆலய நிறுவுநரால் கட்டப்பட்ட இரண்டாவது ஆலயம் மீளமைக்கப்பட்டு இன்றைய ஆலயமாக விளங்குகின்றது. வைரக்கருங் கற்களால் அமைக்கப்பட்டதே இந்த ஆலயமாகும். இம்மீள் நிர்மாணத் திருப்பணி கி.பி 1908ஆம் ஆண்டு ஆரம்பித்து கி.பி 1912ஆம் ஆண்டில் நிறைவுற்றது. ஆலயம் முன்பிருந்ததை விட விஸ்தீரணமாகக் கட்டப்பட்டது. மூலஸ்தானத்திலிருந்து, ஸ்நபன மண்டபம் வரை மற்றும் இராச கோபுர அடித்தளம்

(வியாழவரிசை/வியாழவர்க்கம்) முன் சுவர் மணிக்கூட்டுக்கோபுரம் போன்றவை வைரக்கற்களால் அமைக்கப்பட்டன. பரிவார மண்டபங்கள், ஸ்தம்ப மண்டபம், தரிசன மண்டபம், சுற்றுப்புறமண்டபங்கள், வெளிமண்டபம், போன்ற கட்டிட அமைப்புக்கள் அமைக்கப்பட்டன. மூலஸ்தானம், அம்மன், நடேஸர், மண்டபங்கள், பரிவாரக் கோவில்கள் ஆகியனவற்றில் சிறிய தூபிகள் அமைக்கப்பட்டன. கொடிமரம் (ஸ்தம்பம்) நாட்டப்பட்டது. முன்பு வழிபாட்டிலிருந்த திருவுருவங்களுடன் புதிதாகத் திருவுருவங்கள் அவர்களுக்குரிய மண்டபங்களிற் பிரதிஷ்டை செய்யப்பட்டன. இத்திருப்பணிகளின் அடியார்களிற் சிலர் தம்தனி உபயமாகச் சிலவற்றைப் பொறுப்பேற்றுத் தொண்டு செய்தனர்.

## இதன் விபரங்களாவன: மூர்த்திகளும், மண்டபங்களும்.

(1) மூலமூர்த்திகள், பரிவாரமூர்த்திகள்.
(2) உபயகாரர்
(3) இன்றைய வம்சாவளி உபயகாரர் என்ற வரிசையில் விபரங்கள் அடங்குகின்றன.

(1) சிவலிங்கம் மூலவர் (மூலஸ்தானம்) பொது

(2) சிவகாமி அம்பாள் - திருமதி நாகலிங்கம் வள்ளியம்மை
(ஆலய வம்சவழி பரமானந்தியின் பீட்டப்பிள்ளை):

(3) நடராசர் - காசிநாதர் வயித்திலிங்கம் - டாக்டர். அ. சிதம்பரநாதன்

(4) விநாயகர் - சோமநாதர் அருணாசலம் - பரமன் அமுதன், சுஜீவன் ஈழராணி

(5) வன்மீகநாதர் - கிருஷ்ணபிள்ளை, சபாபதிப்பிள்ளை - தி. உதயசூரியன் முதலியோர்

(6) ஐம்புகேசுவரர் - கார்த்திகேசு நல்லசேகரம்பிள்ளை - ஆ. கமலநாதன் முதலியோர்

(7) திருக்காளத்தீஸ்வரர் - இராமலிங்கம் - கந்தப்பாபிள்ளை

(8) அருணாசலேஸ்வரர் - உயர்திரு. ஆறுமுகம்பிள்ளை அம்பலவாணநாவலர் சுவாமிகள் - சபாரத்தினம் திருச்சிற்றம்பலம் குடும்பம்

(9) சிதம்பரேஸ்வரர் - சின்னத்தம்பி நாகலிங்கம் - சின்னத்தம்பி செல்லம்மாள் வழித்தோன்றல்

(10) பிரதோஷமூர்த்தி - வேலுப்பிள்ளை சிவனடியார்

(11) மஹாவிஸ்ணு - நாகமுத்து சுப்பிரமணியம் - கலாநிதி அ. அற்புதராஜா

(12) சுப்பிரமணியர் - நாகமுத்து மாரிமுத்து - இராசதுரை குடும்பம்

(13) இலட்சுமி - தில்லையம்பலம் நாகலிங்கம் - நா. கதிரவேற்பிள்ளை

(14) சரஸ்வதி - நாகமுத்து சுப்பிரமணியம் - சு. அருளம்பலம்

(15) துர்க்கை - சித்தியவான் கணபதிப்பிள்ளை - திருமதி லீலாமணி இராசதுரை

(16) வைரவர் - அருணாசலம் சிதம்பரநாதபிள்ளை - க. அருணாசலம்

(17) தெட்சணாமூர்த்தி - வே. இராமுப்பிள்ளை

(18) சமயகுரவர் (நிருத்தியமூலை) — வேலாயுதர் இராமுப்பிள்ளை

(19) சூரியன், சந்திரன், சண்டேஸ்வரர், நவக்கிரகம் - பொது

## மண்டபங்கள்:

(01) இராஜகோபுர அடித்தளம் (வியாளவரிசை) திருமதி மாருதப்பிரவல்லியம்மா மார்க்கண்டபிள்ளை

(02) பூந்தோட்ட மடம் (அன்னதான சமயல்கூடம் - அறைகள் மண்டபம்) - சுப்பிரமணியர் பொன்னையாபிள்ளை

(03) பூந்தோட்ட மதில் - கு. தில்லைநாதர்

(04) கொடித்ஸ்தம்ப மண்டபம்: ச.த (சங்கர்ப்பிள்ளை தம்பையா) நல்லசேகரம்

(05) தரிசன மண்டபம் - சி. பகவதியார் பொன்னம்பலபிள்ளை

(06) நடேசர் சபை, ஸ்நபன மண்டபம் - காசிநாதர் வைத்திலிங்கம்

(07) மணிக்கூட்டுக் கோபுர(ம்) காண்டாமணி – வ. க. வயித்திலிங்கம் (1919ஆம் ஆண்டு)

இத்திருப்பணிகளுடன் ஏனைய திருப்பணிகளும் திருவுருவப் பிரதிஷ்டைகளும் அடியார்கள் பலரின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டன. இக்கோவிலிற் திருப்பணிகள் ஆலய பாலஸ்தாபன மகா கும்பாபிஷேகங்களின் போது மட்டுமல்லாது ஏனைய காலங்களிலும் முன்னெடுக்கப்படுகின்றன.

சகல தூண்களும் கொங்கிறீற் தூண்களாக நிறுத்தப்பட்டன. கொட்டகைகள் முன்னையிலும் மூன்றரை அடி உயர்த்தப்பட்டது. துர்க்கை அம்மன் மண்டபம் (பிரகாரம்) விசாலிக்கப்பட்டது. சண்டேஸ்வரர் ஆலயம் ஒன்றரை அடி பின் நகர்த்தப்பட்டது. (உபயம் சு. மயில்வாகனம்) உள் வசந்த மண்டபம், யாகசாலை இடவசதிக்காக அகற்றப்பட்டு யாகசாலை வைரவர் பிரகாரத்துக்கருகில் அமைக்கப்பட்டது. (உபயம் சி. சின்னத்தம்பி) ஒரே பிரகாரத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்ட சூரியன், சந்திரன் ஆகியோரில் சூரியனுக்காக ஒரு பிரகாரம் தனியே அமைக்கப்பட்டுப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. (உபயம் இளையதம்பி இராசரத்தினம்) ஆலயம் மீளமைக்கப்பட்ட பொழுது பிள்ளையாருக்கு அருகில் தென்புறம் நிருத்திய மூலையில் வேலாயுதர் இராமுப்பிள்ளை அவர்களால் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்த சமயகுரவர் நால்வரும் தெட்சணாமூர்த்திக்கு முன்பாக அமைக்கப்பட்ட பிரகாரத்தில் ஸ்தபதி ம. செல்லக்கண்ணு (சென்னை) அவர்களின் ஆலோசனையின்படி பிரதிஷ்டை செய்யப்பட்டனர். மீளமைப்பு:- களஞ்சிய அறை (உபயம் அ. சோமசுந்தரம், சோ. தெய்வேந்திரம்) மடப்பள்ளி (உபயம் தி. சிவமயம், தி. இராமஜெயம்) இத்திருப்பணிகள் 1967 ஆண்டுகள் வரை செய்யப்பட்டன.

அம்மன் வாசல் வெளிக் கொட்டகை அமைப்பு (உபயம்: திரு மா. சக்திவேல்) (காலம் 1967 – ஏறக்குறைய)

பிள்ளையார் நடேசப்பெருமான் சிவகாமி அம்பாள் ஆகியோருக்குப் புதுத்தேர் காணிக்கை (உபயம் திரு. பொ. சிவசுப்பிரமணியம்) (காலம் 1968-1973 வரை)

ஆலயத்திற்கு மின்சார இணைப்பு பெறப்பட்டது. (உபயம் பொது)

ஆலயத்தின் இராஜகோபுர அடித்தளத்திலிருந்து அடுக்குக் கோபுரம் ஐந்து (5) கலசங்களுடன் அமைக்கப்பட்டு அதன் மகா கும்பாபிஷேகம் 31-01-1977இல் நடைபெற்றது.

முன்பு ஏக (ஒரு) தளமாக இருந்த சிவன் மூலஸ்தான ஸ்தூபி, புதிதாகத் துவி (இரண்டு) தளமாக்கி அதில் 55 விக்கிரகங்களை அமைத்துவர்ணம் தீட்டப்பட்டது. (காலம் 1983 – 1984)

இவ்விரு திருப்பணிகளின் உபயம்: திருமதி ச. கு. வள்ளியம்மை அவர்களாகும்.

கொடித்ஸ்தம்ப மண்டபத்தின் முன் ஸ்நபனமண்டப முன்பக்கத்தில், முன்பு இருந்த சிலா விக்கிரகங்களை அகற்றிப் புதிதாக பிள்ளையார் சிவசக்தி முருகன் ஆகியோரின் சிலா விக்கிரகங்கள் அமைக்கப்பட்டன. பிள்ளையார்:- திரு. ச. கணநாதன், சிவன் சிவகாமி: திரு. சே. வே. சேதுநாதர் குடும்பம் சுப்பிரமணியர்: வைத்தியர் திரு க. வேலாயுதம்பிள்ளை ஆகியோர் உபயகாரர்களாவார்கள்.

இத் திருப்பணிகள் 14-11-1984இல் நடைபெற்ற மகா கும்பாபிஷேக காலத்தில் நடைபெற்றன.

பூந்தோட்டத்தில் உள்ள செங்களுநீர்த்தொட்டி, தீர்த்தக்கிணறு, கோவில் சுற்றுமதில்கள் ஆகியனவற்றின் புனரமைப்பு (காலம் 2002 - 2003) தீர்த்தக் கேணி கொட்டகை (மண்டபம்) மீள் அமைப்பு (உபயம்: திரு. வேலுப்பிள்ளை அருணாசலம் குடும்பம்)

உள் வீதியில் எழுந்தருளி மண்டபம் அமைப்பு (1967 அகற்றப்பட்டது) மீள் அமைப்பு காலம் 2004 (உபயம் திரு. சி. திருச்செல்வம், திருமதி பஞ்சாட்சரம், திருமதி தனம்)

ஆலய வெளி வசந்த மண்டபத்தின் தென்புறம் புதிய கூரை அமைத்து விஸ்தரிப்பு. (உபயம்: திரு. வி. க விஜயரத்தினம் திவாகரன் காலம் - 2005)

1967ஆம் ஆண்டளவில் நடைபெற்ற கூரைகள் புனரமைப்பின் பொழுது வேயப்பட்டிருந்த ஓடுகள் மாற்றப்பட்டு சீற்றுகள் புதிதாக அவ்விடங்களை நிரப்பின.

அம்பாள், நடராஜர் சன்னதிகளும், ஸ்நபன மண்டபம் ஆகியனவற்றின் மேல் புதிதாகக் கூரைகள் அமைக்கப்பட்டன.

கொடி (ஸ்தம்ப) தரிசன மண்டபக் கூரை உயர்த்தப்பட்டது.

தெட்சணாமூர்த்தி, இலிங்கோற்பவர், துர்க்கை அம்மன், சண்டேஸ்வரர் ஆகிய சுவாமிகளை உள்ளடங்கிய கற்பக்கிரகத்தைச் சுற்றிச் சீமெந்தினால் பிளேற் போடப்பட்டது.

நடராஜப்பெருமானின் ஸ்தூபி, சிதம்பரத்தின் விமானத்தின் வேலைப்பாடுகளுக்கு அமையப் புதுப்பிக்கப்பட்டது.

மாபிள் (கற்கள்) பதிக்கும் வேலையும் செய்யப்பட்டது.



இத்திருப்பணிகள் 29-10-2010இல் நடைபெற்ற 33 யாக மகா கும்பாபிஷேக காலத்திற்கு செய்யப்பட்டன.

இத்திருப்பணிகளுடன், காலத்துக்குக் காலம் வேறு பல திருப்பணிகளும் நடைபெற்றும், தொடர்ந்தும் இடம்பெறுகின்றன.

அமிர்தபுஸ்கரணி தீர்த்தக்கேணி வைரக்கற்களாற் கட்டுதல், அன்னதான சமையல் கூடம் புனரமைப்பு, நவக்கிரக ஆலயம், மேற்கூரை இரதவடிவில் அமைப்பு

ஆலய பரிபாலன சபை மண்டபம் அமைத்தல் காலம் 1985-1986 உபயம் திரு செல்லப்பா சுப்பிரமணியம்

ஆலய பரிபாலனசபைக் கருமபீடம், அமைத்தல், குழாய் நீர் விநியோக வசதி, தேர்க் கொட்டகை அமைத்தல், கோவிலின் முன்னுள்ள கிணறு புனரமைக்கப்பட்டு ஆடுகால்கள், துலா ஆகியன நீக்கப்பட்டு கப்பி மூலம் நீர் பெற வசதி செய்யப்பட்டது.

ஆண், பெண் அடியார்கள் பாவனைக்குத் தனித்தனியாக இரு மலசலகூடங்கள் அமைப்பு – உபயம் - அரசநிதி உதவியுடன் பரிபாலன சபையினரால் கட்டப்பட்டன.

வெளி வசந்த மண்டபத்துக்கருகில் களஞ்சிய அறைகள் அமைப்பு உபயம் திரு.து.கோணேசநாதன்.

வெளி வசந்தமண்டப முன் மண்டபக் கூரை அரச நிதியுதவியுடன் பரிபாலன சபையாரால் புனரமைக்கப்பட்டது

# திருவுருவப் பிரதிஷ்டை

**ஆலயத்தில் காலத்துக்குக் காலம் புதிய திருவுருவங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.**

(1) உமா மகேஸ்வரர் : உபயம் - திரு. வே. சிவனடியான் சிவராசா அவர்களும், சகோதரர்களும் - காலம் 1966 – 1967

(2) இலிங்கோற்பவர்: உபயம் - வைத்தியர் பரமகுருநாதன் மயூரேசன் அவர்கள் காலம்: சித்திரபானு வருஷம், ஐப்பசி மாதம் 11ஆம் நாள் (28-10-2002) திங்கட்கிழமை, ஸப்தமி திதி, புனர்பூச நட்சத்திரம், மகர இலக்கினம் ஆகியன கூடிய சுபதினவேளை முற்பகல் 11.30 மணி 12.45 மணி வரையில், கற்பக்கிரக பச்சிம (மேற்கு) கோஷ்டத்தில் எழுந்தருள் பாலிக்கும் புதிய சிவலிங்கோற்பவ மூர்த்திக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

(3) ஸ்ரீதெட்சணாமூர்த்தி: உபயம் - திரு. வி. க. விஜயரட்ணம் திவாகரன் காலம்: ஆரம்ப வழிபாட்டின் பொழுது திரு வே. இராமுப்பிள்ளையின் உபயமாக இந்த ஆலயத்திலிருந்த ஸ்ரீதெட்சணாமூர்த்தியின் திருவுருவில் ஊறு ஏற்பட்டமையால் புதிதாகத் திருவுரு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. நிகழும் சுபானு வருடம் ஐப்பசி மாதம் 18ஆம் நாள் (03-11-2004) புதன்கிழமை, புனர்பூச நட்சத்திரம் கூடிய காலை 9-14 மணி முதல் 11-10 மணி வரையுள்ள சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இந்த ஆலயத்தில் மீளமைக்கப்பட்ட காலத்தில் இலக்குமி, சரஸ்வதி ஆகிய தெய்வங்களுக்கும் தனித்தனிப் பரிவாரக் கோவிலில் எழுந்தருள் செய்யப்பட்டனர். இன்று வரை நவராத்திரி காலங்களில் இவ்விருவரின் நாட்களில் விஷேட வழிபாடுகள் இடம்பெறுகின்றன. வேறு சிவன் ஆலயங்களிலோ ஏனைய கோயில்களிலோ தனிப்பிரகாரங்கள் இவ்விரு தெய்வங்களுக்கும் இருப்பது அரிதாம்.

இந்த ஆலயத்தின் மூலஸ்தானத்தில் சிவலிங்கத் திருச்சொரூபம் பிரமாணத்தில் சிறிதாக இருப்பதால் அவ்விடத்தில் பெரிய சிவலிங்கத் திருச்சொரூபம் பிரதிஷ்டை செய்யப்படவேண்டுமென்றும் இப்பொழுதுள்ள சிவலிங்கப் பெருமானுக்கு அம்பாளின் உயரம் கூடிப்போய் விட்டதால் அவ்விடத்தில் சிறிய அம்பாளின் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும் என்று பல பெரியோர்கள் கூறியதால் ஆலய பரிபாலன சபையினர் பழனி, திருச்சி இந்தியாவைச் சேர்ந்த ஸ்தபதி திரு ம. செல்லக்கண்ணு அவர்களுடன் ஆலோசனை செய்தனர்.

அதற்கமைவாக அவர் ஆராய்ந்து சிவலிங்கப் பிரமாணத்தின்படி சிவலிங்க மத்திச் சுற்றளவு 10 ½ இஞ்சியாகும். அந்த அளவு 1½ பாகத்தில் அம்பாள் திருவுருவம் அமைந்திருப்பதும் சாத்திர விதிக்கு சரியாகவே இருக்கிறது. ஆனபடியால் ஏற்கனவே வைத்துப் (பிரதிஷ்டை செய்து) பூசை செய்து வணங்கும் சுவாமி, அம்பாளை எடுத்து புதிதாகத் திருச்சொரூபங்களைப் பிரதிஷ்டை செய்யக்கூடாது. எனச் சாத்திரங்கள் கூறுவதால் இப்பொழுது இருக்கும் சுவாமி அம்பாளையே பூசை செய்வதும் வணங்குவதும் விஷேசத்தைக் கொடுக்கும் என்ற அறிக்கையை 27-04-1966இல் பரிபாலன சபையிடம் கையளித்தார். இந்த அறிக்கையை ஆலய பரிபாலன சபையார் ஏற்றுக் கொண்டனர்.

## காணிக்கை

ஆலய வம்சாவளியும், ஆலய நிறுவுனரின் அண்ணன் சு.ஆறுமுகம் - பரமானந்தி தம்பதிகளின் பீட்டப் பிள்ளையும், ஆலய பரிபாலன சபையின் தலைவருமாகக் கடமையாற்றியவருமான திரு (டாக்டர்) கணபதிமுத்து காசிநாதனும், அவரின் மனைவி

குணபூசணி அம்மாளும் சேர்ந்து , காணி (நெல்வயல்) ஐந்து (5) ஏக்கரைச் சிவனுக்குக் காணிக்கையாக்கினர்.

“போட்டர்காடு” என்றழைக்கப்படும் இந்நெல்வயல் (காணி): கீழ்மாகாணம், திரிகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பற்று, கந்தளாய் என்னும் பிரதேசத்தில் பேராற்று வெளியில் அமைந்துள்ளது. இக்காணியின் ஏக்கர் ஐந்து (5) காணி (வயல்) இந்த ஆலயத்துக்குக் காணிக்கை செய்யப்பட்டது.

இக்காணி 15-12-1955ஆம் ஆண்டில் நொத்தாரிஸ் முருகேசு கந்தையா சுப்பிரமணியம் முகதாவில் 3667 ஆம் இலக்கத்தில் முடித்த அறுதிஉறுதிப்படி இவர்களின் கொள்முதல் ஆட்சியு மானது. “போட்டர்காடு” எனப்படும் இக்காணி திரிகோணமலை பதிவுக் கந்தோரில் இலக்கம் D 18 390 இல் பதிவு செய்யப்பட்டது.

இந்த ஐந்து (5) ஏக்கரும், முழுக்காணியில் மேற்குப்புறமாக நிந்தப்படுத்தப்பட்டுள்ளது. இக்காணி (வயல்) எல்லை கிழக்கு - இதன் மிகுதிக்காணி, வடக்கு – கந்தப்பர் வல்லிபுரத்துக்குரிய காணியும் வாய்க்காலும் மற்றும் மறுபேருக்கும் உரிய காணி : மேற்கு இஸ்மெயில் முதலி வாப்பாவின் 144750 இலக்க பிளானில் காட்டப்படும் காணி தெற்கு – காசிநாதன் பொன்னையா மற்றும் மறுபேருக்குமுரிய காணியாகும்.

இக்காணி (வயல்) யின் உறுதி நொத்தாரிஸ் முருகேசு கந்தையா சுப்பிரமணியம் முகதாவில் இலக்கம் 4969இல், 06-03-1960ஆம் ஆண்டில் எழுதப்பட்டது.

ஆலயத்தின் சார்பில் இக்காணிக்கையைப் பெற ஆலய பரிபாலன சபையின் தலைவர் டாக்டர் க. காசிநாதன் அவர்களே காணிக்கையாளராக இருப்பதால் உப-தலைவர் திரு அருணாசலம் சோமசுந்தரம் அவர்களும், செயலாளர் (காரியதரசி) திரு செல்லப்பா சுப்பிரமணியம் அவர்களும் , பொருளாளர் (தனாதிகாரி) திரு. சங்கரப்பிள்ளை கந்தையா அவர்களும் இந்த உறுதியிற் கையொப்பமிட்டனர்.

இச்செயற்பாட்டிற்கு திரு சிற்றம்பலம் இராசசுந்தரம் திரு குமாரசுவாமி நடராசா ஆகியோர் சாட்சிகளாவார்கள்.

இக்காணியில் வரும் வருமானத்தை ஆலயத்தின் நித்திய , நைமித்திய கருமங்களுக்கு உபயோகிக்கப்பட வேண்டும் என்ற காரணத்திற்கமைய காணிக்கை செய்யப்பட்டது.

இக்காணி திரிகோணமலைப் பிரதேச (மாவட்டத்தில்) இருப்பதால், காணிக்கை யாளர்களின் பின் அவர்களின் சகோதரர்கள், அவர்களின் பின் அவர்களின் சந்ததியினர், இக் காணியைப் பராபரித்து அதில் வரும் வருமானத்தை ஆலய பரிபாலன சபையிடம் கொடுக்க வேண்டும்

இவ்விரு நிபந்தனைகளும் மேற்கூறிய உறுதியிற் பதியப்பட்டுள்ளன.

# மகா கும்பாபிஷேகங்கள்

## இந்த ஆலயத்தில் பின்வரும் ஆண்டுகளில் மகா கும்பாபிஷேகம் மங்கலகரமாக இடம்பெற்றது.

1850, 1890, 1900, 1912, 1916, 1945, 1966, 1984, 1997, 2010 ஆகியனவாம்.

1850ஆம் ஆண்டு, முதன் முதல் மடாலயம் அமைத்து மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதை "ஆவர்த்தம்" என்பர். (புதிதான ஓரிடத்திற் புதிதாகக் கோவில் கட்டி குடமுழுக்கு செய்தல்)

1890ஆம் ஆண்டு மடாலயம் மீளமைக்கப்பட்டு ஆலயமாக மாற்றப்பட்டது. முன்னர் வழிபாட்டிலிருந்த மூலவருக்குப் பதிலாகப் புதிதாகச் சிவலிங்கம் மூலவராக நூதன பிரதிஷ்டை செய்யப்பட்டு , மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இவ்விரு கும்பாபிஷேகங்களும், ஆலய நிறுவனராம் , சிவசீலர் திரு. சு. கதிர்காமஞானி அவர்களாற் செய்யப்பட்டன.

1900ஆம் ஆண்டு நிறுவுனரின் தமையனின் பிள்ளை , பேரப்பிள்ளைகளாற் குட நன்னீர் ஆட்டு விழா செய்யப்பட்டது.

1912ஆம் ஆண்டு, மீளமைக்கப்பட்ட இக்கால வழிபாட்டிலுள்ள இந்த ஆலயத்தில் புனராவர்த்தன ஜீர்ணோத்தாரன அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேகக் குரு சிவஸ்ரீ வைரவநாதக்குருக்கள் ஆவார். ஆலய உரிமையாளர்களும், பொது மக்களும் (அடியார்கள்) சேர்ந்து இக் கைங்கரியத்தைச் செய்தனர்.


1913ஆம் ஆண்டு அதன் பின்வரும் ஆண்டுகளில் இடம்பெற்ற நிகழ்வுகளும் அதனால் ஆலய வழிபாட்டில் ஏற்பட்ட தாக்கங்கள் காரணமாக 1916ஆம் ஆண்டு இராஷத வருடம் தை (தமிழ்) மாதம் 04ஆம் நாள் முற்பகல் 10.00 மணி தொடக்கம் 11.00 வரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்தத்தில் நடைபெற்றது. ஆலய மனேச்சர் (பரிபாலகர்) அடியார்கள் ஆகியோரால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

## ஆலய பரிபாலன சபை காலங்களில் நடைபெற்ற கும்பாபிஷேகங்கள்

1945ஆம்ஆண்டு:- 19-01-1945இல் கும்பாபிஷேககுரு:- சிவஸ்ரீ குமாரசாமிக்குருக்கள் (அச்சுவேலி)

1966ஆம் ஆண்டு :- விசுவாசு வருடம், (1965ஆம் ஆண்டு) (தமிழ்) ஆனி மாதம் 24ஆம் திகதி பாலஸ்தாபனம் செய்யப்பெற்றது.

பராபவ வருடம் வைகாசி மாதம் தமிழ் 26ஆம் நாள், (08-06-1966) புதன்கிழமை காலை மு. ப. 10-30 மணி முதல் 11.45 மணி வரையில், சிங்க இலக்கின சுபமுகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷே குரு :- சிவஸ்ரீ நா. சோமசுந்தரக்குருக்கள்.



1984ஆம் ஆண்டு :- பாலஸ்தாபனம் - துந்துபி வருடம் 04-02-1983இல் நடைபெற்றது. ருதிரோத்காரி வருடம் - 1984 – கார்த்திகை மாதம் 14ஆம் திகதி புதன்கிழமை காலை 9.55 மணிக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. பிரதிஷ்டா குரு :- சிவஸ்ரீ. நா. சோமஸ்கந்தக்குருக்கள்.

1997ஆம் ஆண்டு - ஈசுர ஆண்டு, ஆனி மாதம் 22ஆம் நாள் (06-07-1997) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-55 மணி முதல் 12.00 மணி வரை வரும் பூச நட்சத்திரமும், கன்னி இலக்கினமும் கூடிய குரு வோரையில் பாலஸ்தாபனம் நடைபெற்றது.

ஈசுர வருடம் ஐப்பசி மாதம் (தமிழ்) 5ஆம் நாள், (22-10-1997) புதன்கிழமை, மு. ப. 10.00 மணி முதல் 11-45 மணிவரையுள்ள புனர்பூச நட்சத்திரமும், தனு இலக்கினமும் கூடிய சுபவேளை மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. பிரதிஷ்டா குரு:- சிவஸ்ரீ. கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்

2010ஆம் ஆண்டு:- விரோதி வருடம், தை மாதம் 09ஆம் நாள் (22-01-2010) வெள்ளிக்கிழமை, காலை 10.00 மணி முதல் 10-30 மணி வரையிலுள்ள ரேவதி நட்சத்திரமும், மீன இலக்கினமும் கூடிய சுபவேளையிற் பாலஸ்தாபனம் நடைபெற்றது.

விகிர்தி வருடம், ஐப்பசி மாதம், 12ஆம் நாள் (29-10-2010) வெள்ளிக்கிழமை, காலை 9-31 மணி முதல் 10-25 மணிவரை, ஸப்தமித் திதியும், புனர்பூச நட்சத்திரமும், சித்தயோகமும், தனுலக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத்தில், உத்தமோத்தம த்ரயத்ரிம்சத் குண்டபக்ஷ (33+குண்டயாக) மகா கும்பாபிஷேகம் மங்களகரமாக நடைபெற்றது. பிரதிஷ்டா குரு :- சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள். (ஆலய குருக்கள்)

33 ஓம குண்டல மகா கும்பாபிஷேகம் - சித்தன்கேணி என்னும் இந்த ஊரில், முதன்முதல், (இந்நாட்டில் நடைபெற்ற முதல்யாகம்) பெரியவளவு மகா கணபதிப்பிள்ளையார் கோவிலில் விளம்பி வருடம் 1958இல் ஆவணி மாதத்தில் மங்களகரமாக நடைபெற்றது. இதன் போது பிரதிஷ்டா குருவாக சிவஸ்ரீ வை. மு. குமாரசாமிக்குருக்கள் (ஆலய குருக்கள்) இருந்தார்கள்.

# வழிபாடு

**நித்திய பூசை**

உசாக்காலப் பூசை

காலைப் பூசை

உச்சிக்காலப் பூசை

சாயரட்சைப் பூசை

அர்த்தசாமப் பூசை

என ஐந்து காலப் பூஜைகள் தினமும் நடைபெறுகின்றன.

**மஹோற்சவம்**

இவ்வாலயத்தில், ஆனி மாத உத்தரத் திருநாளைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு பத்து (10) தினங்கள் மஹோற்சவ காலமாகும். இவ்வுற்சவம் கொடியேற்ற (துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகிப் பத்தாம் நாள், தீர்த்தோற்சவம், கொடியிறக்கம் (துவஜாஅவரோகணம்) சண்டேஸ்வரர் உற்சவத்துடன் நிறைவுறும்.

இவ்வுற்சவ காலங்களில், இறைவனும், இறைவியும், முறையே இடபம், கற்பகதரு, நால்வர், அன்னம், இலிங்கோற்பவர், தெப்பம், நாகம் (நாகலோகம்). சப்பறம், தேர் ஆகியனவற்றில் எழுந்தருளி காட்சியளிப்பர். உற்சவ காலங்களில் ஒவ்வொரு நாட்களும் ஒவ்வொரு உபசார சமர்ப்பணங்கள் இறைவனுக்குச் சமர்ப்பிக்கப்படும். வேதம், திருமுறை, வேணு, சங்கீதம், நாதஸ்வரம், மிருதங்கம், வீணா, நிருத்தம் ஆகியன இவ்வுபசாரங்களில் அடங்கும்.

இரதோற்சவத்தில், ஐந்து தேர்கள் மூன்றாம் திருவீதியில் வலம் வருகின்றன. விநாயகப் பெருமான், நடராஜப்பெருமான், சிவகாமியம்மை, சுப்பிரமணியப்பெருமான், சண்டேஸ்வரர் ஆகியோர், பஞ்ச இரதங்களில் பவனி வந்து அருள்பாலிப்பர். பத்தாம் நாள், ஆனி உத்தரத் திருநாளில், அதிகாலை நடராஜப்பெருமானுக்கும், சிவகாமி அம்பாளுக்கும் விஷேச அபிஷேக ஆராதனையுடன் உத்தர தரிசனமும் (ஆருத்திரதரிசனம்) இடம்பெறுகின்றன. தீர்த்தோற்சவம், ஆலயத்தின் இரண்டாம் வீதியில், வடபுறம் அமைந்துள்ள "அமிர்தபுஸ்கரணி" தீர்த்தவாரி (கேணி)யில் நடைபெறும்.

இரவு திருவூஞ்சல் பூசை, (திருவூஞ்சற் பதிகம் இயற்றியவா் பிரம்மஸ்ரீ த. காசிநாதக்குருக்கள் அவா்கள்) கொடியிறக்கம் (துவஜாஅவரோகணம்), சண்டேஸ்வரர் உற்சவம் ஆகியவற்றுடன் மஹோற்சவம் நிறைவுறும். இதனை அடுத்து வரும் செவ்வாய்க்கிழமை, அல்லது வெள்ளிக்கிழமை வைரவப் பெருமான் மடை இடம்பெறும். மகா சங்காபிஷேகம், பௌர்ணமி முழுநிலா திருநாளில் நடைபெறும் 1008 சங்குகளினால் அபிஷேகம், பகலிலும், திருக்கல்யாண உற்சவம் இரவிலும் நடைபெறும்.

## ஏனைய உற்சவங்கள்

மார்கழி மாதத் திருவாதிரைக்காலம் பத்து (10) நாட்கள் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. ஒன்பதாம் நாள் பஞ்ச இரதபவனி உற்சவமாகும். பத்தாம் நாள், திருவாதிரைத் திருவேளை அதிகாலை, விஷேச அபிஷேகமும், ஆராதனையும் நடைபெற்று நடராஜப்பெருமான் சிவகாமி அம்பாள் ஆகியோரின் ஆருத்திர தரிசனக் காட்சி அருள் செறிந்ததாக அமையும்.

## ஏனைய திருவிழாக்களும் பூசைகளும்.

ஆடிப்பூரத் தினத்தில் மாலை அம்பிகைக்கு ருதுசாந்தி வைபவம் நடைபெறுகிறது. சிவராத்திரி விரத நாளில் நான்கு காலப்பூசைகள் நடைபெறுகின்றன. இலிங்கோற்பவ

காலத்தில், விஷேட அபிஷேகமும், வில்வ அர்ச்சனையும் இடம்பெற்று இலிங்கோற்பவ ஆருத்திர தரிசனமும், அருள் சூழ்ந்த காலம் (நேரம்) என அமையும். நான்காம் பூசையின் பின், "அமிர்தபுஸ்கரணி" கேணியில் தீர்த்தோற்சவம் இடம்பெறும். கார்த்திகைச் சோமவார தினங்கள், நவராத்திரி இறுதி நாள் சர்வாலய தீபம் ஆகியன திருவிழா நாட்களாக அமையும். மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்த தினத்தன்று வருடாந்த சங்காபிஷேகம் நடைபெற்று வருகிறது.

## நடேசர் அபிஷேகம்

சித்திரை மாதம் - திருவோண நட்சத்திர தினம்; ஆனி – உத்தரம் தினம் ஆவணி, புரட்டாதி மாதம் - பூர்வ சதுர்த்தசி தினம்; மார்கழித் திருவாதிரை தினம், மாசி – பூர்வ சதுர்த்தசித் தினம், ஆகிய தினங்களில் விஷேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன.

## விரதகாலப் பூசைகள்

ஆடிச் செவ்வாய், புரட்டாதி சனிக்கிழமை, நவராத்திரி காலம், கேதாரகௌரி விரத காலம், மாதாந்த பிரதோஷகாலம், ஐப்பசிவெள்ளி, பங்குனி உத்தரம், வரலட்சுமிவிரதம் ஆகியன அடங்கும்.

பங்குனி உத்தரம், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி தினம், தைப்பொங்கல், போன்ற விஷேச தினங்களில் விஷேட வழிபாடுகள் இடம்பெறுகின்றன. வியாழக்கிழமைகளில் தெட்ஷணாமூர்த்திப் பெருமான், வியாழபகவான் ஆகியோரையும் சனிக்கிழமைகளில், சனீஸ்வரப்பெருமானையும், விஷேசமாகத் தோஷ நிவாரணம் பெறும் வண்ணம் வழிபாடு நடைபெறுகின்றன.

ஆலய பரிபாலன சபைக் காலத்தில் 06-07-1945ஆம் ஆண்டில் கொடியேற்றத்துடன் ஆரம்பித்த மஹோற்சவம் மற்றும் ஏனைய திருவிழாக்கள் ஆகியன இன்று வரை மிகவும் சிறப்புடன் நடைபெற்று வருகின்றன.

# கோவில் அமைப்பு

ஆகம முறைப்படி இக்கோவில் அமைக்கப்பட்டுள்ளது. மூலஸ்தானத்தில் (கருவறையில்), சிவலிங்க ரூபத்தில், ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரப்பெருமான் எழுந்தருள் பாலிக்கின்றார். அர்த்த மண்டபத்துக் கருவறையில் தெற்கு நோக்கியவாறு சிவகாமசுந்தரி அம்பாள் எழுந்தருள் பாலிக்கின்றார். மகா மண்டபம், ஸ்ஞபன மண்டபம் ஆகியன இணைந்துள்ள பகுதியில் அமைந்துள்ள நடேசர் சபையில் நடராசப்பெருமான் அம்பிகையுடன் அருள்பாலிக்கின்றார். இவர் எழுந்தருளி மூர்த்தியாகும். சிவகாமசுந்தரி அம்பாள், நடராஜப்பெருமான் ஆகியோர் தெற்கு நோக்கி எழுந்தருள் பாலிக்கின்றனர்.

மூலவரின் ஸ்தூபி ஆரம்பத்தில் ஏக (ஒரு) தளமாக இருந்தது. பின்னர் (1984 ஆம் ஆண்டில்) துவி (இரண்டு) தளமாக மாற்றப்பட்டுள்ளது. இத்தள மாடங்களில், கிழக்குப்புறம்

சிவலிங்கம், பிள்ளையார், முருகன் ஆகியோரின் திருவுருவங்களும், தென்புறம் கல்லால் மரநிழலின் கீழ் ஞான நிலையில் தெட்சணாமூர்த்தியும், மேற்குப்புறம் ஆதிஷேசனின் படுக்கைமேல் மகாவிஸ்ணுப்பெருமான் இலக்குமி அம்பாளுடனும், அமர்ந்திருக்க, அவரின் தொப்பிளிலிருந்து, பிரமம் உற்பத்தியாகும் காட்சியுடனான திருவுருவும், மற்றும் சிவன் சக்தி ஆகியோரும், வடபுறம் சோமாஸ்கந்தமூர்த்தமும் (சிவன், பார்வதி, முருகன்), மற்றும் நான்முகன், ஆகியோர்களும், நாற்புற மூலைகளில், சிவதாண்டவக் காட்சி (சிவன் முயல்கனை வதம் செய்யும் காட்சி) அம்மன், நந்திகள், அஸ்டதிக்குப் பாலகர் ஆகியோர்களின் திருவுருவங்கள், இவை போன்றவையும் சுதையிலான உருவங்களில் அழகுற அமைக்கப்பட்டுள்ளன.

இறைவியின் பண்டிகையில் (ஸ்தூபியில்) வட-திசையில் அம்மனும், கீழ்த்திசையில் இலக்குமியும், மேற்குத் திசையில் சரஸ்வதியும், மற்றும் எருது வாகனங்களும் ஆகியன சுதையினால் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. நடராசப்பெருமான் சிலா உருவம், நடேசர் மண்டபத்தின் வடபுறம் வைக்கப்பட்டுள்ளது.

ஸ்நபன மண்டபத்தில், கும்பப் பூசைகளும் மஹோற்சவ, திருவெம்பாவைக் காலத்தின் தேர் உற்சவத்தின் வசந்தமண்டபப் பூசை நடராஜமூர்த்திக்கும் நடைபெறுகின்றன.

இம் மண்டபத்தின் முகப்பில், சிவன், சக்தி, பிள்ளையார், வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியப் பெருமான் ஆகியோரின் சுதையிலான அழகிய சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

ஸ்தம்ப மண்டபத்தில், நந்திப்பெருமான், பலிபீடம், கொடிக்கம்பம் ஆகியன உள்ளன.

தரிசன மண்டபம், உள், வெளி மண்டபங்களாக இரு பிரிவுகளில் அடங்கும் ஆலய கோபுர வாசல், இரு மண்டபங்களின் மத்தியில் அமைந்துள்ளது.

இவ் இராசகோபுரம், பஞ்ச (ஐந்து) தளங்களைக் கொண்டுள்ளது. இக்கோபுரத்தின் கிழக்கு நோக்கிய கீழ் தளத்தில், சிவலிங்கப்பெருமானுக்குப் பூசகர் பூசை செய்யும் காட்சியும், ஓம்சிவசிவ என்ற வாசகமும், அமைக்கப்பட்டுள்ளன. சிவன், சக்தி, பிள்ளையார், முருகன், தெட்சணாமூர்த்தி, இலக்குமி, பிரம்மா, சரஸ்வதி, அட்டதிக்குப் பாலகர்கள் போன்ற பல திருவுருவங்கள் இக் கோபுரத்தின் மேல் தளத்தில் சுதையினால் அமைக்கப்பட்டுள்ளன.


ஆலயத்தின் உள்வீதி, தரிசன மண்டபத்துடன் இணைந்துள்ளது. உள்வீதியின் கிழக்குப்புறம், யாகசாலை, வைரவப்பெருமான், மற்றும் சந்திரன் ஆகியோரின் பரிவார மண்டபங்கள், (கோவில்கள்); மணிக்கூட்டுக் கோபுரம், பஞ்சதள கோபுரம் 1966ஆம் ஆண்டிலிருந்து சூரியனின் பரிவாரக் கோவிலும் உள்ளன.

உள்வீதியின் தென்புறம், பாகசாலை (மடப்பள்ளி), பரிபாலன சபைக் காரியாலயம் நடேசப் பெருமானினதும், அம்மனினதும் தெற்கு வாசல்கள் அம்மன் வாசலின் முன் சிங்க வாகனமும், பலிபீடமும், அதற்கு முன்றலில் இரண்டாம் வீதிக்குச் செல்லும் தெற்கு வாசலும், கல்லாலில் மரத்தின் கீழ், சனகாதிமுனிவர்களுக்கு உபதேசிக்கும் ஞானமுத்திரையுடன் கூடிய தெட்சணாமூர்த்திப் பெருமானும், அவருக்கு நேரே சமயகுரவர் நால்வரும் (ஆதியில், நிருத்திய,













(தென்மேற்கு) மூலையில், பிள்ளையார் அருகில், உள்ள பிரகாரத்தில் வழிபாடாற்றப்பட்டவர்கள் - 1966 ஆம் ஆண்டில் நகர்த்தப்பட்டனர்). ஆகியன அடங்கியுள்ளன.

உள் வீதியின் மேற்குப்புறம் லிங்கோற்பவமூர்த்தி (2002ஆம் ஆண்டு தொடக்கம்) பிள்ளையார், பஞ்சலிங்கங்களான – வன்மீகர், ஜம்புகேஸ்வரர், அருணாசலர், சிதம்பரேஸ்வரர், திருக்காளத்தீஸ்வரர் ஆகியோர், மகாவிஸ்ணுபெருமான், பிரதோஷமூர்த்தி, முருகப்பெருமான், இலக்குமி, சரஸ்வதி ஆகியோரின் பரிவாரக் கோவில்கள் அமைந்துள்ளன.

பிள்ளையார், சிவன், முருகன் ஆகியோரின் பிரகாரங்கள் ஸ்துபியுடன் அமைக்கப்பட்டுள்ளன. உள்வீதியின் வடபுறம், துர்க்கை அம்மன் பரிவார மண்டபம், சண்டேஸ்வரர் பரிவார மண்டபம், தீர்த்தக் கிணறு, நவக்கிரக மண்டபம், உள் வசந்த மண்டபம் (தேவசபை) ஆகியன அடங்கியுள்ளன.

ஆலயத்தின் வெளி வீதியை இரண்டாம் வீதி எனலாம். வெளி வீதியின் கிழக்குப்புறம், வெளி தரிசன மண்டபம், முன் ஆலய வாசல் ஆகியனவற்றுடன் இணைந்துள்ளது. இக்கிழக்கு வெளி வீதியின் வடபால், வசந்தமண்டபம் உள்ளது. (இம் மண்டபம் முதலில் 1906ஆம் ஆண்டிற் கட்டப்பட்டது. பின்னர் 2012ஆம் ஆண்டில் மீளமைக்கப்பட்டது) மஹோற்சவ காலத்தில் வசந்தமண்டபப் பூசையும், ஆனி, மார்கழி, உத்தர திருவாதிரை காலம். அதிகாலை நடேசர் அபிஷேகமும் இம் மண்டபத்தில் நடைபெறுகின்றன. வட-தென் புற தரிசன மண்டபங்கள், ஆலய பரிபாலன சபையின் கரும பீட அறை ஆகியன இருக்கின்றன.

இவ்வெளி வீதியின் தென்புறம், அம்மன் தெற்கு வாசல் வெளிமண்டபம், அதனுடன் தென்புறம் அமைந்துள்ள அம்மனின் வெளிமண்டப வாசல் (1857-10-07இல் எழுதப்பட்ட இலக்கம் 550இன் கோவில் உறுதியிற் கூறப்பட்டுள்ள கோவிலின் தெற்கு எல்லையாம் ஒழுங்கையில் அமைந்துள்ளது) ஆகியனவற்றைக் கொண்டுள்ளது. இவ்வெளி வீதியின் மேற்குப்புறம் தனி வீதியாக உள்ளது.

இரண்டாம் வெளி வீதியின் வடபுறத்தில் கருங்கற்களால் அமைக்கப்பட்ட அமிர்த புஸ்கரணி தீர்த்தக்கேணி, களஞ்சிய அறை, உபயகாரர் அறை, மகேஸ்வர பூசையின் பாக (சமையல்) மண்டபம் பூந்தோட்டம் ஆகியன உள்ளன. ஆலயத்தின் மூன்றாம் வீதி (வெளி) தார்ப்பாதைகளாகும். இம் மூன்றாம் வெளி வீதியின் கிழக்குப் புறம், ஆலய பரிபாலன சபை மண்டபம், தேர்கள் தரிப்பிடக் கொட்டகை, கிணறு, நீர் வழங்கும் பைப்புகள், ஆண், பெண் மலசல கூடங்கள் ஆகியனவற்றைக் கொண்டுள்ளது. இவ் வீதியின் வடபுறம், ஆலயத்தின் வட மேற்குப்புறம் - பிரதான தார் வீதியில் சித்தர்கள் அமைத்த கேணி அமைந்துள்ளது.

## ஆலய பதிவு

இந்து சமய கலாசார அலுவலகர் திணைக்களத்தில் ஆலயம் பதியப்பட்டுள்ளது.

பதிவு இலக்கம் :- ஏச்ஏ/5/ஜேஏ/160

(HA/5JA/160)

திகதி :- 27-12-1984

## அடியார்கள்

ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரப்பெருமானில் பக்தி பூண்ட அடியார்கள் திருக்கூட்டம் பெரியதாம் இவர்கள் இறைதாசர்களாக வாழ்ந்து, காலத்துக்குக் காலம் செய்யும் இறைபணிகளும், வழங்கும் காணிக்கைகளும் அளவிட முடியாது. இவற்றை எழுத்துக்குள் அடக்கிவிட முடியாது. இவை வணக்கத்திற்கு உரியனவாகும்.

தன உடை (தனவுடை)ப் பதியில், அடியார்களை ஈர்த்து, அருள் வழங்கி, அணைத்துக்காக்கும் ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரப்பெருமான் பாதார விந்தங்கள் போற்றி.

**“ஓம் நமசிவாய – சிவாயநம ஓம்”**

